©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R.Dis. No. 197/2009
[Price: Rs. 15.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 48] CHENNAI, WEDNESDAY, DECEMBER 12, 2012
Karthigai 27, Thiruvalluvar Aandu–2043

# Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

## CONTENTS

*Pages.*

**வருவாய்த் துறை**

ஆட்சி எல்லை–கோயம்புத்தூர் மாவட்டம்–பொள்ளாச்சி வட்டத்தினை பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு என இரண்டு வட்டங்களாக பிரித்து கிணத்துக்கடவை தலைமையிடமாகக் கொண்டு புதிய கிணத்துக்கடவு வட்டம் உருவாக்குதல் .. .. .. .. 88-94

ஆட்சி எல்லை – கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தைப் பிரித்து புதிய அன்னூர் வட்டம் உருவாக்குதல் .. .. .. 95-102

ஆட்சி எல்லை – காஞ்சிபுரம் மாவட்டம் – செங்கற்பட்டு வட்டத்தைப் பிரித்து திருப்போரூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய திருப்போரூர் வட்டம் உருவாக்குதல் .. .. .. .. 102-108

ஆட்சி எல்லை – ஈரோடு மாவட்டம் – பவானி மற்றும் கோபிசெட்டிப்பாளையம் வட்டங்களைச் சீரமைத்து அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அந்தியூர் வட்டம் உருவாக்குதல் .. .. .. .. 109-116

**ஆட்சி எல்லை–பெரம்பலூர் மாவட்டம்–குன்னம் வட்டத்தினை பிரித்து ஆலத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஆலத்தூர் வட்டம் உருவாக்குதல் ..** 116-124

## NOTIFICATIONS BY GOVERNMENT

### வருவாய்த் துறை

*தலைமைச் செயலகம், 2012 டிசம்பர் 12*

**ஆட்சி எல்லை—கோயம்புத்தூர் மாவட்டம்—பொள்ளாச்சி வட்டத்தினை பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு என இரண்டு வட்டங்களாக பிரித்து கிணத்துக்கடவை தலைமையிடமாகக் கொண்டு புதிய கிணத்துக்கடவு வட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்படுகிறது.**

*[அரசாணை (நிலை) எண் 406, வருவாய் [வ. நி—1(1)த் துறை, 2012 நவம்பர் 21.]*

No. II(2)/REV/36/2012.

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.

படிக்கவும்:

(1) அரசு கடித எண் 24533/வ.நி. 1(1).2011—2, நாள்: 2011 நவம்பர் 2

(2) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க. எண் பணி 6(4) 36879/2011, நாள்: 2011 டிசம்பர் 23 மற்றும் 2012 ஜூன் 26..

*[அரசாணை (நிலை) எண் 406, வருவாய் [வ. நி—1(1)த் துறை, நாள் 2012 நவம்பர் 21.]*

1—06—2011 அன்று சட்டப்பேரவையில் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்களால் கேட்கப்பட்ட உடுக்குறியிட்ட வினா எண் 139—க்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கிணத்துத்கடவு தொகுதி, கிணத்துக்கடவை தலைமையிடமாகக் கொண்டு தனிவட்டம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும், விரைவில் இதுபற்றி முடிவெடுக்கப்படும் என்றும் பதிலளித்துள்ளார்.

2. அதனடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. இந்நேர்வு தொடர்பாக கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் தனதறிக்கையில் பின்வருமாறு பரிந்துரை செய்துள்ளார்.

(i) கோயம்புத்தூர் மாவட்டத்தில், பொள்ளாச்சி வட்டம் ஒரு மிகப் பெரிய பரப்பளவைக் கொண்ட வட்டமாகும். பொள்ளாச்சி வட்டம் 131 கிராமங்களை உள்ளடக்கிய 11 உள்வட்டங்கள், 4 மண்டலங்கள், 4 ஊராட்சி ஒன்றியங்கள், 9 பேரூராட்சிகள் மற்றும் 118 ஊராட்சிகள் கொண்டது என்றும் மேலும், மக்கள்தொகை, நிலவரி வசூல், நில அளவைப் புலங்கள் மற்றும் தேர்தல் பணி ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டும், நிர்வாக நலன் மற்றும் பொதுமக்களின் தேவைகளை காலதாமதம் இல்லாமல் விரைவாக பூர்த்தி செய்வதற்கு ஏதுவாகவும், பொள்ளாச்சி வட்டத்தினை பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு என இரண்டு வட்டங்களாகப் பிரித்து, பொள்ளாச்சி வட்டத்தில் தற்போதுள்ள 11 உள்வட்டங்களிலிருந்து வடசித்தூர் (9 கிராமங்கள்), கிணத்துக்கடவு (12 கிராமங்கள்) மற்றும் கோவில்பாளையம் (14 கிராமங்கள்) ஆகிய உள்வட்டங்களைப் பிரித்து புதிய கிணத்துக்கடவு வட்டம் உருவாக்க கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

(ii) அரசாணை (நிலை) எண் 279, வருவாய், நாள் 9—06—2003 குறித்த நிலைப் படிவத்தின்படி உத்தேசிக்கப்பட்ட கிணத்துக்கடவு வட்டம் கீழ்க்கண்டவாறு அமையும்.

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *தற்போது உள்ளபடி வட்டம்* | *உத்தேச பிரிவினைக்கு பின் வட்டம்* | | *அரசாணை எண் 279, வருவாய்த் துறை நாள் 9—06—2003—படி குறித்த நிலை* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | | *(5)* |
| | | பொள்ளாச்சி | உத்தேசிக்கப் பட்ட வட்டம் கிணத்துக்கடவு | எஞ்சிய வட்டம் பொள்ளாச்சி | |
| 1 | தலைமையிடம் | பொள்ளாச்சி | கிணத்துக்கடவு | பொள்ளாச்சி | |
| 2 | பரப்பளவு (ச.கி.மீ) | 1041,11 (ச.கி.மீ) | 298.47 (ச.கி.மீ.) | 742.63 (ச.கி.மீ.) | குறைந்த அளவு 250 ச.கி.மீ. முதல் 2000 ச.கி.மீ. வரை. |
| 3 | மக்கள் தொகை | 5,73,478 | 1,03,880 | 4,71,598 | குறைந்த அளவு 1,00,000 ச.கி.மீ. முதல் 5,50,000 ச.கி.மீ. வரை |

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *தற்போது உள்ளபடி வட்டம்* | *உத்தேச பிரிவினைக்கு பின் வட்டம்* | | *அரசாணை எண் 279, வருவாய்த்துறை நாள் 9–06–2003–படி குறித்த நிலை* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | | *(5)* |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | பொள்ளாச்சி | பொள்ளாச்சி | பொள்ளாச்சி | |
| 5 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | 1. பொள்ளாச்சி (முழுவதும்)<br>2. கிணத்துக்கடவு (முழுவதும்)<br>3. உடுமலை (பகுதி)<br>4. வால்பாறை (பகுதி) | 1. கிணத்துக்கடவு (முழுவதும்)<br>2. பொள்ளாச்சி (முழுவதும்) | 1. பொள்ளாச்சி (பகுதி)<br>2. உடுமலை (பகுதி)<br>3. வால்பாறை (பகுதி) | |
| 6 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | பொள்ளாச்சி | பொள்ளாச்சி (பகுதி) | பொள்ளாச்சி (பகுதி) | |
| 7 | நகராட்சிகளின் | 1<br>எண்ணிக்கை | –<br>பொள்ளாச்சி | – | 1<br>பொள்ளாச்சி |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 4<br>1. ஆனைமலை<br>2. பொள்ளாச்சி(வடக்கு)<br>3. பொள்ளாச்சி (தெற்கு)<br>4. கிணத்துக்கடவு | 1<br>கிணத்துக்கடவு | 3<br>1. பொள்ளாச்சி (வடக்கு)<br>2. பொள்ளாச்சி (தெற்கு)<br>3. ஆனைமலை | |
| 9 | டவுன் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை (பெயருடன்) | 9<br>1. நெகமம்<br>2. கோட்டூர்<br>3. ஆனைமலை<br>4. வேட்டைக்காரன் புதூர்<br>5. ஒடையகுளம்<br>6. ஜமீன் ஊத்துக்குளி<br>7. சமத்தூர்<br>8. சூளேஸ்வரன்பட்டி<br>9. கிணத்துக்கடவு | 1<br>கிணத்துக்கடவு | 8<br>1. நெகமம்<br>2. கோட்டூர்<br>3. ஆனைமலை<br>4. வேட்டைக்காரன் புதூர்<br>5. ஒடையகுளம்<br>6. ஜமீன் ஊத்துக்குளி<br>7. சமத்தூர்<br>8. சூளேஸ்வரன்பட்டி | |
| 10 | உள்வட்டங்களின் எண்ணிக்கை/ பெயர் | 11<br>1. வடசித்தூர் 9<br>2. கிணத்துக்கடவு 12<br>3. கோவில்பாளையம் 14<br>4. கோவார்பட்டி 11<br>5. பொள்ளாச்சி (தெற்கு) 18<br>6. பொள்ளாச்சி (வடக்கு) 19<br>7. பெரிய நெகமம் 13<br>8. ராமபட்டிணம் 16<br>9. மார்ச்சநாயக்கன் பாளையம் 4<br>10. ஆனைமலை 7<br>11. கோட்டூர் 8<br>131 | 3<br>1. வடசித்தூர் 9<br>2. கிணத்துக்கடவு 12<br>3. கோவில்பாளையம் 14<br>35 | 8<br>1. கோவார்பட்டி<br>2. பொள்ளாச்சி (தெற்கு)<br>3. பொள்ளாச்சி (வடக்கு)<br>4. பெரிய நெகமம்<br>5. ராமபட்டினம்<br>6. மார்ச்ச நாயக்கன்பாளையம்<br>7. ஆனைமலை<br>8. கோட்டூர் | 11<br>18<br>19<br>13<br>16<br>4<br>7<br>8<br>96 |
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 131 | 35 | 96 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 12 | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 127 | 34 | 84 | – |

(iii) மேலும் புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்ட கிணத்துக்கடவு வட்டத்திற்கான பணியிட விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *பொள்ளாச்சி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள்* | *வட்டத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய பணியிடங்கள்* | *கிணத்துக்கடவு வட்டத்திற்கு மாற்றம் செய்யவேண்டிய பணியிடங்கள்* | *கிணத்துக்கடவு வட்டத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள்* | *கிணத்துக்கடவு வட்டத்தில் அனுமதிக்க வேண்டிய மொத்தப் பணியிடங்கள்* |
|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* |
| | **(அ) பொதுப்பிரிவு** | | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | 4 | 3 | 1 | – | 1 |
| 4 | வருவாய் உதவியாளர் | 8 | 5 | 3 | – | 3 |
| 5 | வருவாய் ஆய்வாளர் | 11 | 8 | 3 | – | 3 |
| 6 | இளநிலை உதவியாளர் | 8 | 5 | 3 | – | 3 |
| 7 | தட்டச்சர் | 2 | 2 | – | 1 | 1 |
| 8 | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | 1 | 1 |
| 9 | பதிவுறு எழுத்தர் | 1 | 1 | – | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் (அலுவலகம்) | 7<br>12:1 விகிதப்படி 5 பணியிடங்கள் | 3 | 2 | – | 2 |
| 11 | அலுவலக உதவியாளர் (வருவாய் ஆய்வாளர் வாரியாக) | 11 | 8 | 3 | – | 3 |
| 12 | இரவு காவலர் | 1 | 1 | – | 1 | 1 |
| 13 | மசால்ஜி | – | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **56** | **39** | **15** | **7** | **22** |
| | **(ஆ) சமூக பாதுகாப்புத்திட்டம்** | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | துணை வட்டாட்சியர் | – | – | – | – | – |
| 3 | உதவியாளர் | 2 | 1 | 1 | – | 1 |
| 4 | இளநிலை உதவியாளர் | 3 | 2 | 1 | – | 1 |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | – | – | – | 1 | 1 |
| 6 | பதிவுறு எழுத்தர் | 1 | 1 | – | – | 1 |
| 7 | அலுவலக உதவியாளர் | 2<br>பொதுப்பிரிவிற்கு மிகையாக உள்ள பணியிடங்கள் | 1 | 1 | – | 1 |
| | **மொத்தம்** | **9** | **6** | **3** | **2** | **5** |
| | **(இ) தேர்தல் பிரிவு** | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வருவாய் உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | வருவாய் இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **3** | **3** | **–** | **3** | **3** |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| | **(ஈ) வட்ட வழங்கல் பிரிவு** | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | 1 | 1 | – | – | – |
| 2 | துணை வட்டாட்சியர் | – | – | – | 1 | 1 |
| 3 | வருவாய் உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | வருவாய் இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 5 | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | 3 | 2 | 1 | – | 1 |
| 6 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | – | – | – |
| 7 | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | – | – |
| | **மொத்தம்** | **8** | **7** | **1** | **3** | **4** |
| | **(உ) நில அளவைப் பிரிவு** | | | | | |
| 1 | வட்டத் துணை ஆய்வாளர் (நில அளவைப் பிரிவு) | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | நகர சார் ஆய்வாளர் | 2 | 2 | – | 1 | 1 |
| 4 | பஞ்சாயத்து சார் ஆய்வாளர் | 1 | 1 | – | – | – |
| 5 | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 6 | இளநிலை வரைவாளர் | 1 | 1 | – | 1 | 1 |
| 7 | குறுவட்ட அளவர் | 11 | 8 | 3 | – | 3 |
| 8 | புல உதவியாளர் | 6 | 4 | 2 | – | 2 |
| | **மொத்தம்** | **24** | **19** | **5** | **4** | **9** |
| | பொதுப்பிரிவு மொத்தம் கூடுதல் (அ.ஆ.இ.ஈ) | 76 | 55 | 19 | 15 | 34 |
| | உ.நில அளவைப் பிரிவு | 24 | 19 | 5 | 4 | 9 |
| | **மொத்தம்** | **100** | **74** | **24** | **19** | **43** |

பொள்ளாச்சி வட்டத்தில் 12:1 அடிப்படையில், 2 உதவியாளர் பணியிடங்கள் மிகையாக உள்ளன. எனவே, அவ்விரு பணியிடங்களை பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு வட்டத்திற்கு சமூக பாதுகாப்பு பிரிவிற்கு தலா ஒரு பணியிடம் வீதம் அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். எனவே, புதிய கிணத்துக்கடவு வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு மொத்தம் 34 பணியிடங்கள் (19 பொள்ளாச்சி வட்டத்திலிருந்து மாற்றம் + 15 புதிய பணியிடங்கள்) மற்றும் நில அளவைப் பிரிவிற்கு 9 பணியிடங்கள் (5 பொள்ளாச்சி வட்டத்திலிருந்து மாற்றம் + 4 புதிய பணியிடங்கள்) ஒப்பளிப்பு செய்ய முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(iv) மேலும், புதிதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்ட கிணத்துக்கடவு வட்டத்திற்கு வருடத்திற்கு, தோராயமாக ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினம் கீழ்க்கண்டவாறு ஆகும்:

**தொடரும் செலவினங்கள்:**

| வ.எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | 1,31,58,708 |
| 2 | வாடகை | 1,44,000 |
| 3 | மின்சாரக் கட்டணம் | 1,20,000 (20,000 x 6 மாதங்கள்) |
| 4 | எரிபொருள் (டீசல்) | 1,68,000 (140லி. x ரூ. 50 x 12 மாதங்கள் x 2 ஈப்புக்கு) |
| 5 | தொலைபேசி கட்டணம் | 25,500 ரூ. 4,250 x 6 மாதங்களுக்கு |
| | **மொத்தம்** | **1,36,16,208** |

**தொடராச் செலவினங்கள்:**

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | அலுவலகக் கட்டிடம் | 1 | 2,02,86,000 |
| 2 | வட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 19,32,000 |
| 3 | தளவாடங்கள் | – | 6,07,300 |
| 4 | ஈப்பு | 2 (ஒன்றுக்கு 5,56,000) | 11,12,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6 | கணினி | 3 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுபதிப்பு) இயந்திரம் | 3 | 25,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 2 | 10,000 |
| | **மொத்தம்** | – | **2,41,53,300** |

(v) மேலும் எதிர்பாரா செலவினமாக கைக்கடிகாரம், மிதிவண்டி மற்றும் பணப்பெட்டிக்கு ரூ. 10,000/– வழங்குமாறும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்

**3.** 08–05–2012 அன்று பேரவையில் நடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110 ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் வெளியிட்ட அறிவிப்பின்கீழ் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தினை பிரித்து கிணத்துக்கடவு வட்டம் பிரிப்பது ஒன்றாகும்.

**4.** முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தினை பிரித்து வடசித்தூர், கிணத்துக்கடவு, கோவில் பாளையம் ஆகிய உள்வட்டங்களை உள்ளடக்கிய புதிய கிணத்துக்கடவு வட்டம் இணைப்பு (1)–ல் உருவாக்கப்படுகிறது.

(ii) எட்டு உள்வட்டங்கள் அடங்கிய பொள்ளாச்சி வட்டத்தில், பொதுப்பிரிவிற்கு 55 பணியிடங்களையும் நில அளவைப் பிரிவிற்கு 19 பணியிடங்களையும் நிறுத்தி வைத்து, மூன்று உள்வட்டங்கள் அடங்கிய புதிய கிணத்துக்கடவு வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 34 பணியிடங்களும் (பொள்ளாச்சி வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 19 பணியிடங்கள் + 15 பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்தும்) நில அளவைப் பிரிவிற்கு 9 பணியிடங்களும் (பொள்ளாச்சி வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 5 பணியிடங்கள் + புதிதாக தோற்றுவித்தல் மூலம் 4 பணியிடங்கள்) தோற்றுவிக்கப்படுகிறது.

(iii) புதியதாக உருவாக்கப்படும் கிணத்துக்கடவு வட்டத்திற்கு புதிதாக 19 பணியிடங்கள் வெவ்வேறு நிலைகளில் தோற்றுவிக்கப்படுவதால் தொடரும் செலவினமாக ஆண்டுக்கு ரூ. 1,36,16,208/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தாறு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று எட்டு மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(iv) புதிதாக உருவாக்கப்படும் கிணத்துக்கடவு வட்டத்திற்கு தொடராச் செலவினமாக ரூ. 2,41,63,300/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

**5.** மேலே பத்தி 4 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(அ) பணியாளர் சம்பளங்கள்

(i) **வருவாய் பணியிடங்கள்–ரூ. 1,31,58,708**

2053 00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு-I திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள்–ரூ. 1000/–

2029 00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் -I திட்டத்தில் சேராதது AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2029 00 102 AF 0105)

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள்—ரூ. 1000/—

3456 00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் - I திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளர் அமைப்பு – 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 3456 00 001 AB 0108)

(ஆ) தொலைபேசி கட்டணங்கள் ரூ. 31,500/—

05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) சில்லரைச் செலவினங்கள் ரூ. 1,00,000/—

05 அலுவலக செலவுகள் 02 ஏனைய சில்லரை செலவுகள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0522)

(ஈ) மின் கட்டங்கள் ரூ. 1,20,000/—

05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0531)

(உ) 05 05 அறைகலன் ரூ. 6,07,300/—

05 அலுவலக செலவுகள் 05 அறைகலன்

(த.தொ.கு. 2053 00 094 AB 0559)

(ஊ) வாடகைச் செலவினங்கள்—ரூ. 1,44,000/—

06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை (தொடரும் செலவினம்)

(த.தொ.கு. 2053 00 094 AB 0611)

(எ) இயந்திரமும், சாதனமும் ரூ. 1,10,000/—

19 இயந்திரமும், சாதனமும் 01 வாங்குதல்

(த.தொ.கு. 2053 00 094 AB 1914)

(ஏ) வாகனங்கள் வாங்குதல்— ரூ. 11,12,000/—

21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல்

(த.தொ.கு. 2053 00 094 AB 2119)

(ஐ) பெட்ரோல் மற்றும் டீசல் செலவினங்கள் ரூ. 1,68,000/—

45 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்

(த.தொ.கு. 2053 00 094 AB 4500)

(ஒ) கணினியும் துணை பாகங்களும் ரூ. 1,00,000/—

76 கணினியும் துணை பாகங்களும் 01 வாங்குதல்

(த.தொ.கு. 2053 00 094 AB 7614)

(ஓ) அலுவலகக் கட்டடம் ரூ. 2,02,86,000/—

4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—01 அலுவலகக் கட்டடங்கள்—051 கட்டுமானம்—பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்—II மாநிலத் திட்டம்—JC நிலவரி—16 பெரும்பணிகள்.

(த.தொ.கு. 4059—01 051 JC 1609)

(ஔ) வட்டாட்சியர் குடியிருப்பு ரூ. 19,32,000/—

4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு—01 அரசு குடியிருப்பு கட்டடங்கள்—106 பொது தொகுப்பு இடவசதி—பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்—II மாநிலத் திட்டம் —JC வருவாய்த்துறை—வீட்டுவசதித் திட்டங்கள் 16 பெரும்பணிகள்.

(த.தொ.கு. 4216—01 106 JC 1601)

**6.** மேலே பத்தி 4—ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொ.து) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை—5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2012—2013 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது./வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**7.** மேலே பத்தி 4 இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**8.** இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 61964/CMPC/12, நாள் 8—11—2012—இல் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 1539 (ஆயிரத்து ஐநூற்று முப்பத்தொன்பது.)

(ஆளுநரின் ஆணைப்படி)

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**இணைப்பு—I**

*[அரசாணை (நிலை) எண் 406, வருவாய், நாள் 2012 நவம்பர் 21.]*

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்போதைய கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தைப் பிரித்து கீழ்க்கண்ட 3 குறுவட்டங்களை உள்ளடக்கி கிணத்துக்கடவைத் தலையிடமாகக் கொண்டு புதிய கிணத்துக்கடவு வட்டம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிதாக உருவாக்கப்படும் கிணத்துக்கடவு வட்டத்தில் உள்ளடக்கும் குறுவட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது பொள்ளாச்சி வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி கிணத்துக்கடவு வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**அட்டவணை**

| வ.எண் | வட்டத்தின் பெயர் | உள்வட்டங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | கிணத்துக்கடவு | 1. கிணத்துக்கடவு |
| | | 2. வடசித்தூர் |
| | | 3. கோவில்பாளையம் |

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

*தலைமைச் செயலகம் 2012 டிசம்பர் 12.*

**[ஆட்சி எல்லை – கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தைப் பிரித்து புதிய அன்னூர் வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.]**

No. II(I)/REV/37/2012.-

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.

*[அரசாணை (நிலை) எண். 407, வருவாய் [வ.நி.–1(1)த் துறை, 21 நவம்பர் 2012]*

**படிக்கவும்:**

(1) மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் கடித எண். 13643/2009–அ1, நாள் 26–01–2012.

(2) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.6(4)/29873/2009, நாள் 30–03–2012.

(3) அரசு கடித எண். 44172/வ.நி.1(1)/2011–4, நாள் 14–06–2012.

(4) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். 6(4)/36881/2011, நாள் 26–06–2012.

**ஆணை:** அரசாணை (நிலை) எண். 407, வருவாய் [வ.நி.–1(1)த் துறை, 21 நவம்பர் 2012.]

கால விரையமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும், வட்டாட்சியர் அலுவலகம் திறம்பட செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08–05–2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன்கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**“கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தினை பிரித்து புதிய அன்னூர் வட்டம் தோற்றுவிக்கப்படும்.”**

**2.** மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர், முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடம் புதிய அன்னூர் வட்டம் உருவாக்குவது தொடர்பான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

(*i*) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒருங்கிணைந்த கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து திருப்பூர் மாவட்டம் தனி மாவட்டமாக பிரிக்கப்பட்டபோது, அவினாசி வட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு கோயம்புத்தூர் மாவட்டத்தின், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்துடன் கூடுதலாக 22 வருவாய் கிராமங்கள் இணைக்கப்பட்டன என்றும், அன்னூர் கிராமம், ஈரோடு மாவட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டத்திற்கு இடைப்பட்டு உள்ளது என்றும், அன்னூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட 22 வருவாய் கிராமங்களுடன், சர்க்கார்சாமக்குளம் ஒன்றியத்துக்குட்பட்ட எட்டு வருவாய் கிராமங்களைச் சேர்த்து ஆக மொத்தம் 30 வருவாய் கிராமங்கள் அடங்கிய புதிய அன்னூர் வட்டம் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

(*ii*) புதிய அன்னூர் வட்டத்தில் கீழ்கண்டவாறு உள்வட்டங்கள் மற்றும் கிராமங்கள் அமையும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

| | *கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம் தற்போது உள்ளபடி* | | *உத்தேசிக்கப்பட்ட வட்டம்* | | *எஞ்சிய கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம்* | |
|---|---|---|---|---|---|---|
| உள்வட்டங்களின் எண்ணிக்கை பெயருடன் | 1. அன்னூர் (வடக்கு) – | 11 | 1. அன்னூர் (வடக்கு) – | 11 | 1. பெரியநாயக்கன்பாளையம்– | 7 |
| | 2. அன்னூர் (தெற்கு) – | 11 | 2. அன்னூர் (தெற்கு) – | 11 | 2 துடியலூர்– | 8 |
| | 3. சர்க்கார் சாமக்குளம்– | 7 | 3. சர்க்கார் சாமக்குளம்– | 8 | 3 கணபதி– | 3 |
| | 4. பெரியநாயக்கன்பாளையம்– | 7 | | | 4. அனுப்பர் பாளையம் – | 3 |
| | 5. துடியலூர்– | 8 | **மொத்தம்** | **–30** | 5. சரவணம்பட்டி– | 5 |
| | 6. கணபதி– | 3 | | | **மொத்தம்** | **–26** |
| | 7. அனுப்பர் பாளையம்– | 3 | | | | |
| | 8. சரவணம்பட்டி– | 6 | | | | |
| | **மொத்தம்** | **–56** | | | | |

(*iii*) மேலும், மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிக்கையில், தற்போது சரவணம்பட்டி உள்வட்டத்தில் உள்ள வெள்ளாணைப்பட்டி கிராமம் உத்தேச அன்னூர் வட்டத்தில் உள்ள சர்க்கார் சாமக்குளம் உள்வட்டத்திற்கு மாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு ஆணை எண். 279, வருவாய்த் துறை நாள்: 09–06–2003–ன்படி, எந்தவொரு ஊராட்சி ஒன்றியத்தின் எல்லையும், இரண்டு வட்டங்களின் எல்லைக்குள் வருவது போல் ஆட்சி எல்லை மாற்றம் செய்யப்படக் கூடாது என்பதால், அதன்படி சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியம் முழுவதும் உத்தேசிக்கப்பட்ட அன்னூர் வட்டத்திற்குள் அமைவது போல முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டுள்ளதால், சர்க்கார் சாமக்குளம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த வெள்ளாளனைப்பட்டி கிராமத்தினை சரவணம்பட்டி உள்வட்டத்திலிருந்து பிரித்து, உத்தேச அன்னூர் வட்டத்திலுள்ள சர்க்கார் சாமக்குளம் உள்வட்டத்தில் சேர்க்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

*(iv)* புதிய வட்டம் அமைக்க அரசாணை எண். 279, வருவாய்த்துறை நாள் 09–06–2003–ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| *வ.எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *வட்டம் தற்போது உள்ளபடி வட்டம்* | *கோரிக்கையின்படி உத்தேசிக்கப்பட்ட வட்டம்* | *கோரிக்கையின்படி எஞ்சிய வட்டம்* | *அரசாணை எண் 279 வ.து. நாள் 9–6–03ன்படி குறித்த நிலை* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1. | தலைமையிடம் | கோயம்புத்தூர் (வடக்கு) | அன்னூர் | கோயம்புத்தூர் (வடக்கு) | |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ.) | 844.07 | 388.53 | 455.54 | குறைந்த அளவு 250 ச.கி.மீ. முதல் அதிகளவு 2,000 ச.கி.மீ. |
| 3. | மக்கள்தொகை | 4,70,298 | 1,73,712 | 2,96,586 | குறைந்த அளவு 1,00,000 முதல் அதிகளவு 5,50,000. |
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | — |
| 5 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | 1. கவுண்டம்பாளையம் 2. கோயம்புத்தூர் (வடக்கு) | 1. கவுண்டம் 2. அவினாசி 3. அவினாசி | 1. கவுண்டம் பாளையம் பாளையம் 2. கோயம்புத்தூர் (வடக்கு) | — |
| 6 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | 1. நீலகிரி 2. கோயம்புத்தூர் | 1. நீலகிரி 2. கோயம்புத்தூர் | 1. நீலகிரி 2. கோயம்புத்தூர் | — |
| 7 | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | — | — | — | — |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 3<br>1. பெரியநாயக்கன் பாளையம் 2. அன்னூர் 3. சர்க்கார் சாமக்குளம் | 2<br>1. அன்னூர் 2. சர்க்கார் சாமக்குளம் | 1<br>1. பெரியநாயக்கன் பாளையம் | 2 அல்லது 3 முழுஊராட்சி ஒன்றியங்கள் |
| 9 | டவுன் பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 8<br>1. அன்னூர் 2. இடிகரை 3. சர்க்கார்சாமக்குளம் 4. சரவணம்பட்டி 5. பெரியநாயக்கன் பாளையம் 6. கூடலூர் 7. வீரபாண்டி 8. நரசிம்மநாயக்கன் பாளையம் | 3<br>1. அன்னூர் 2. இடிகரை 3. சர்க்கார் சாமக்குளம் | 5<br>1. சரவணம்பட்டி 2. பெரியநாயக்கன் பாளையம் 3. கூடலூர் 4. வீரபாண்டி 5. நரசிம்மநாயக்கன் பாளையம் | |
| 10 | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 1. அன்னூர் (வடக்கு) 2. அன்னூர் (தெற்கு) 3. சர்க்கார்சாமக்குளம் 4. பெரியநாயக்கன் பாளையம் 5. துடியலூர் 6. கணபதி 7. அனுப்பர்பாளையம் 8. சரவணம்பட்டி | 1. அன்னூர் (வடக்கு) 2. அன்னூர் (தெற்கு) 3. சர்க்கார் சாமக்குளம் | 1. பெரியநாயக்கன் பாளையம் 2. துடியலூர் 3. கணபதி 4. அனுப்பர் பாளையம் 5. சரவணம்பட்டி | |
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 56 | 30 | 26 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |

| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
|---|---|---|---|---|---|
| 12 | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 37 | 28 | 09 | |
| 13 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமம் பெயர் | கஞ்சப்பள்ளி (சுமார் 50 கி.மீ.) | சர்க்கார் சாமக்குளம் (சுமார் 15 கி.மீ.) | ஆனைகட்டி (சுமார் 30 கி.மீ.) | |

*(v)* மேற்காணும் விவரங்களின் படி, அரசாணை (நிலை) எண். 279, வருவாய்த் துறை நாள்: 09–06–2003–ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படி புதிய அன்னூர் வட்டத்தில் பரப்பளவு, மக்கள் தொகை மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை குறித்தநிலை பூர்த்தி செய்கிறது. எனினும் எஞ்சிய வட்டத்தில் 26 கிராமங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களை 29–03–2012 நாளிட்ட கடிதத்தில், எஞ்சிய கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மாநகராட்சி வரம்பிற்கு உட்பட்ட மக்கள் நெருக்கம் மிகுந்த 14 வருவாய் கிராமங்கள் உள்ளடக்கியுள்ளன என்றும், வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், உள்வட்டங்களின் எண்ணிக்கை, டவுன் பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை, பரப்பளவு, மக்கள் தொகை முதலியவற்றை நோக்கும்போது, எஞ்சிய கோயம்புத்தூர் (வடக்கு) வட்டமானது உத்தேச அன்னூர் வட்டத்தைவிட இக்காரணிகளில் விஞ்சியதாக இருக்கின்றது என்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

*(vi)* எனவே, நிர்வாகக் காரணங்களுக்காகவும், பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் வழங்குவதை விரிவுபடுத்தும் பொருட்டும், அன்னூர் வட்டம் உருவாக்குவது அவசியம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததை ஏற்று, கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்திலுள்ள சரவணம்பட்டி உள்வட்டத்திலிருந்து வெள்ளாளனைப்பட்டி கிராமத்தினை சர்க்கார் சாமக்குளம் உள்வட்டத்தில் சேர்த்து அன்னூர் வடக்கு, அன்னூர் தெற்கு, சர்க்கார் சாமக்குளம் ஆகிய மூன்று உள்வட்டங்கள் உள்ளடக்கிய புதிய அன்னூர் வட்டம் உருவாக்கலாம் என முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

*(vii)* புதிய அன்னூர் வட்டத்திற்கான பணியிட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள்.* | *கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள்.* | *கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தில் புதிதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்.* | *அன்னூர் வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்கள்* | *அன்னூர் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கக் வேண்டிய பணியிடங்கள்* | *அன்னூர் வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை.* |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (6+7) |
| **அ.** | **பொதுப்பிரிவு** | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 1 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | 3 | 2 | – | 1 | – | 1 |
| 4 | உதவியாளர் | 10 | 6 | – | 4 | – | 4 |
| 5 | சரக வருவாய் ஆய்வாளர் | 8 | 5 | – | 3 | – | 3 |
| 6 | இளநிலை உதவியாளர் | 7 | 4 | – | 3 | – | 3 |
| 7 | தட்டச்சர் | 2 | 1 | – | 1 | – | 1 |
| 8 | பதிவறை எழுத்தர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 9 | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | 12 | 7 | – | 5 | – | 5 |
| 11 | இரவுக்காவலர் | 1 | 1 | – | – | 1 | 1 |

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள். | கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள். | கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தில் புதிதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள். | அன்னூர் வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்கள் | அன்னூர் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கக் வேண்டிய பணியிடங்கள் | அன்னூர் வட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (6+7) |
| 12 | மசால்சி | – | – | 1 | – | 1 | 1 |
| 13 | கணினி இயக்குபவர் | 1 | – | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **48** | **30** | **1** | **17** | **7** | **24** |
| **ஆ.** | **சமூக பாதுகாப்புத் திட்டம்** | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2 | துணை வட்டாட்சியர் (சிறப்பு திட்டங்கள்) | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3. | உதவியாளர் | 2 | 2 | – | – | 1 | 1 |
| 4. | இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் (பொதுப்பிரிவிலிருந்து மாற்றம்) | 1 | 1 | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **6** | **6** | **–** | **–** | **5** | **5** |
| **இ.** | **தேர்தல் பிரிவு** | | | | | | |
| 1. | துணை வட்டாட்சியர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2. | உதவியாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **3** | **3** | **–** | **–** | **3** | **3** |
| **ஈ.** | **வட்ட வழங்கல் பிரிவு** | | | | | | |
| 1. | தனி வட்டாட்சியர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2. | உதவியாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 4. | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | 3 | 2 | 1 | – | – | 1 |
| 5. | அலுவலக உதவியாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 6. | ஈப்பு ஓட்டுநர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **8** | **7** | **–** | **1** | **5** | **6** |
| | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ)** | **65** | **46** | **1** | **18** | **20** | **38** |
| **உ.** | **நில அளவைத் துறை** | | | | | | |
| 1. | வட்ட துணை நில அளவர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2. | நில அளவை சார் ஆய்வாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3. | முதுநிலை வரைவாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 4. | உள்வட்ட நில அளவர் | 6 | 5 | – | 1 | 2 | 3 |
| 5. | நில ஆவண வரைவாளர் | 1 | 1 | – | – | 1 | 1 |
| 6. | புல உதவியாளர் | 2 | 1 | – | 1 | – | 1 |
| | **மொத்தம்** | **12** | **10** | **–** | **2** | **6** | **8** |
| | **ஆக மொத்தம்** | **77** | **56** | **1** | **20** | **26** | **46** |

*(viii)* புதிய அன்னூர் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 38 பணியிடங்களும் (கோயம்புத்தூர் (வடக்கு வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 18 பணியிடங்கள்+புதியதாக தோற்றுவித்தல் மூலம் 20 பணியிடங்கள்) நில அளவைப் பிரிவிற்கு 8 பணியிடங்கள் (கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 2 பணியிடங்கள் + புதியதாக தோற்றுவித்தல் மூலம் 6 பணியிடங்கள்) உருவாக்கலாம் என்றும், மேலும், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்திற்கு பொதுப்பிரிவில் 1 மசால்சி பணியிடம் வழங்கலாம் என்றும் முதன்மைச் செயலாளர் / வருவா் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**3.** புதிய அன்னூர் வட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக தொடரும் மற்றும் தொடரா செலவினம் கீழ்கண்டவாறு ஆகும் எனத் தெரிவித்துள்ளார்.

**I. தொடரும் செலவினங்கள்:**

| *வ.எண்.* | *விவரம்* | *தொகை* |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | 1,40,42,160 |
| 2 | வாடகை | 1,44,000<br>(12,000x12) |
| 3 | மின்சாரக் கட்டணம் | 1,20,000<br>(20,000x6 months) |
| 4 | எரிபொருள் (டீசல்) | 1,68,000<br>(140லி x ரூ.50x12 மாதங்கள்x2=ஈப்புக்கு) |
| 5 | தொலைபேசி கட்டணம் | 25,500<br>ரூ.4,250x6 மாதங்களுக்கு |
| | **மொத்தம்** | **1,44,99,660** |

**II. தொடரா செலவினங்கள்**

| *வ.எண்.* | *விவரம்* | *எண்ணிக்கை* | *தொகை* |
|---|---|---|---|
| 1 | அலுவலக கட்டிடம் | 1 | 2,02,86,000 |
| 2 | வட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 19,32,000 |
| 3 | தளவாடங்கள் | – | 6,07,300 |
| 4 | ஈப்பு | 2 (ஒன்றிற்கு 5,56,000) | 11,12,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6 | கணினி | 3 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம் | 3 | 25,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 2 | 10,000 |
| 12 | சில்லரை செலவினங்கள்<br>மிதிவண்டி + கைக்கடிகாரம் + பணப்பெட்டி | – | 10,000 |
| | **மொத்தம்** | – | **2,41,63,300** |

**4.** முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

*(i)* கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்திலுள்ள சரவணம்பட்டி உள்வட்டத்திலிருந்து வெள்ளாளனைப்பட்டி கிராமத்தினை சர்க்கார் சாமக்குளம் உள்வட்டத்தில் சேர்த்து அன்னூர் வடக்கு, தெற்கு, சர்க்கார் சாமக்குளம் ஆகிய மூன்று உள்வட்டங்கள் உள்ளடங்கிய புதிய அன்னூர் வட்டம், இணைப்பு (1)–ல் கண்டுள்ளவாறு உருவாக்கப்படுகிறது.

*(ii)* ஐந்து உள்வட்டங்கள் அடங்கிய கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தில், பொதுப்பிரிவிற்கு 46 பணியிடங்களையும் நில அளவைப் பிரிவிற்குப் 10 பணியிடங்களையும் நிறுத்தி வைத்து, மூன்று உள்வட்டங்கள் அடங்கிய புதிய அன்னூர் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 38 பணியிடங்களும் (கோயம்புத்தூர் வடக்கு வட்டத்திலிருந்து 18 பணியிடங்கள் மாற்றம் செய்யப்பட்டும், 20 பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்தும்) நில அளவைப் பிரிவிற்கு 8 பணியிடங்களும்

(கோயம்புத்தூர் வடக்கு வட்டத்திலிருந்து 2 பணியிடங்கள் மாற்றம் செய்யப்பட்டும் 6 பணியிடங்கள் புதிதாக தோற்றுவித்தும்), மேலும் கோயம்புத்தூர் வடக்கு வட்டத்திற்கு பொதுப்பிரிவில் ஒரு மசால்சி பணியிடமும் தோற்றுவிக்கப்படுகிறது.

*(iii)* புதியதாக உருவாக்கப்படும் அன்னூர் வட்டத்திற்கு புதிதாக 26 பணியிடங்கள் வெவ்வேறு நிலைகளில் தோற்றுவிக்கப்படுவதால் தொடரும் செலவினமாக ஆண்டுக்கு ரூ. 1,44,99,660/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து தொன்னூற்றொண்பதாயிரத்து அறுநூற்று அறுபது மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

*(iv)* புதிதாக உருவாக்கப்படும் அன்னூர் வட்டத்திற்கு தொடராச் செலவினமாக ரூ. 2,41,63,300/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**(அ) பணியாளர் சம்பளங்கள்**

*(i)* வருவாய் பணியிடங்கள்—ரூ. 1,40,40,160/–

2053 00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு-I திட்டத்தில் சேராதது
AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

*(ii)* நில அளவைப் பணியிடங்கள்—ரூ. 1000/–

2029 00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பட்டுப் பணிகள் -I திட்டத்தில் சேராதது
AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2029 00 102 AF 0105)

*(iii)* குடிமைப் பொருள் பணியிடங்கள்—ரூ. 1000/–

3456 00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் -I திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளர் அமைப்பு – 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 3456 00 001 AB 0108)

(ஆ) தொலைபேசி கட்டணங்கள் ரூ. 31,500/–
05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) சில்லரைச் செலவினங்கள் ரூ. 10,000/–
05 அலுவலக செலவுகள் 02 ஏனைய சில்லரை செலவுகள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0522)

(ஈ) மின் கட்டங்கள் ரூ. 1,20,000/–
05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0531)

(உ) 05 05 அறைகலன் ரூ. 6,07,300/–
05 அலுவலக செலவுகள் 05 அறைகலன்

(த.தொ.கு. 2053 00 094 AB 0559)

(ஊ) வாடகைச் செலவினங்கள் – ரூ. 1,44,000/–
06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை

(த.தொ.கு. 2053 00 094 AB 0611)

(எ) இயந்திரமும், சாதனமும் வாங்குதல் ரூ. 1,10,000/–
19 இயந்திரமும், சாதனமும் 01 வாங்குதல்

(த.தொ.கு. 2053 00 094 AB 0914)

(ஏ) வாகனங்கள் வாங்குதல்— ரூ. 11,12,000/–
21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல்

(த.தொ.கு. 2053 00 094 AB 2119)

(ஐ) பெட்ரோல் மற்றும் டீசல் செலவினங்கள் ரூ. 1,68,000/–
45 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்

(த.தொ.கு. 2053 00 094 AB 4500)

(ஒ) கணினியும் துணை பாகங்களும் வாங்குதல் ரூ. 1,00,000/–
76 கணினியும் துணை பாகங்களும் 01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 7614)

(ஓ) அலுவலகக் கட்டடம் ரூ. 2,02,86,000/–

4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு–01
அலுவலகக் கட்டடங்கள்–051
கட்டுமானம்–பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-II
மாநிலத் திட்டம் -JC
நிலவரி–16 பெரும்பணிகள்.

(த.தொ.கு. 4059 01 051 JC 1609)

(ஔ) வட்டாட்சியர் குடியிருப்பு ரூ. 19,32,000/–

4059 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு–01
அரசு குடியிருப்பு கட்டடங்கள்–106 பொது தொகுப்பு இடவசதி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் -JC வருவாய்த் துறை–வீட்டுவசதித் திட்டங்கள்
16 பெரும்பணிகள்.

(த.தொ.கு. 4216 01 106 JC 1601)

**6.** மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்த செலவினமாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Constingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொ.I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2012–2013 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது./வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**7.** மேலே பத்தி 4 இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**8.** இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 61962/மை.ம.ஆபி./2012–1, நாள் 8–11–2012–இல் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 1541 (ஆயிரத்து ஐநூற்று நாற்பத்தொன்று.)

(ஆளுநரின் ஆணைப்படி)

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**இணைப்பு - I**

*அரசாணை (நிலை) எண் 407, வருவாய்த் துறை, நாள் 21–11–2012*

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்போதைய கோயம்புத்தூர் (வடக்கு) வட்டத்தைப் பிரித்து கீழ்க்கண்ட மூன்று குறுவட்டங்களை உள்ளடக்கி அன்னூரைத் தலையிடமாகக் கொண்டு புதிய அன்னூர் வட்டம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிதாக உருவாக்கப்படும் அன்னூர் வட்டத்தில் உள்ளடக்கும் குறுவட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி அன்னூர் வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**அட்டவணை**

| *வ.எண்* | *வட்டத்தின் பெயர்* | *உள்வட்டங்களின் பெயர்* |
|---|---|---|
| 1 | அன்னூர் | 1. அன்னூர் (வடக்கு) |
| | | 2. அன்னூர் (தெற்கு) |
| | | 3. சர்க்கார் சாமக்குளம் |

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

*தலைமைச் செயலகம், 2012 டிசம்பர் 12.*

**[ஆட்சி எல்லை – காஞ்சிபுரம் மாவட்டம் – செங்கற்பட்டு வட்டத்தைப் பிரிந்து திருப்போரூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய திருப்போரூர் வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது]**

No. II(1)/REV/38/2012.

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை), எண் 408, வருவாய் [வ.நி(1)] த் துறை, நாள் 21 நவம்பர் 2012.]*

**படிக்கவும்:**

(1) மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் கடித எண் ந.க. 54637/2007/அ7, நாள்: 11–01–2012, 13–02–2012.

(2) முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க. பணி 6(4)/81192/2007, நாள் 13–03–2012.

(3) அரசு கடித எண் 39336/வ.நி.1(1)/2011, நாள்: 14–06–2012.

(4) முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க. பணி 6(4)/81192/2007, நாள் 26–06–2012.

**ஆணை:** அரசாணை (நிலை) எண் 408, வருவாய் (வருவாய் [வ.நி.(1)1]ச் துறை, 21 நவம்பர் 2012.]

கால விரையமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக்கொள்ளவேண்டும் என்பதையும் வட்டாட்சியர் அலுவலகம் திறம்படச் செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 8–5–2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110 இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**"காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தைப் பிரித்து புதியதாக திருப்போரூர் வட்டம் தோற்றுவிக்கப்படும்"**

**2.** மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிக்கையின் அடிப்படையில், முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் புதிய திருப்போரூர் வட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:—

*(i)* பூகோள அமைப்பின்படி, சென்னை மாநகருக்கு அருகில் செங்கல்பட்டு வட்டம் அமைந்துள்ளது போல் காணப்பட்டாலும், செங்கல்பட்டு வட்டம், சென்னை மாநகரின் புறநகர்பகுதி அல்ல என்றும், 779.01 ச.கி.மீ. பரப்பளவு மற்றும் 5,68,380 மக்கள் தொகை கொண்டதாகும். நிரந்தரமாக உள்ள குடிமக்கள் மற்றும் பிழைப்பிற்காக குடிபெயரும் மக்கள் என்று செங்கல்பட்டு வட்டத்தில் பொதுமக்களின் எண்ணிக்கையும் புழக்கக்கும் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே வருகின்ற நிலையில், அவர்களுக்கு வளர்ந்து வரும் குறைகளையும், சிரமங்களையும் நிவர்த்தி செய்து கொடுப்பதற்கு ஒரே வட்டாட்சியருக்கு மிகவும் கடினமாக உள்ளது என்பதால் நிர்வாக நலனக் கருதியும் பொதுமக்கள் நலனைக் கருதியும் தற்போதுள்ள செங்கல்பட்டு வட்டத்தை இரு வட்டங்களாக பிரிக்க உத்தேசிப்பது தற்போதைய தேவையின் அடிப்படையில் அமைவதாகும்.

*(ii)* மேலும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் தமது அறிக்கையில் செங்கல்பட்டு வட்டத்திலுள்ள 8 குறுவட்டங்களில் செங்கல்பட்டு குறுவட்டத்தை தவிர 7 குறுவட்டங்களை சீரமைத்து புதியதாக 6 குறுவட்டங்கள், செங்கல்பட்டு மற்றும் திருப்போரூர் வட்டங்களில் முறையே மூன்று குறுவட்டங்கள் கீழ்க்கண்டவாறு வருவாக்க பரிந்துரை செய்துள்ளார்.

| *செங்கல்பட்டு வட்டம் தற்போதுள்ளபடி* | | *உத்தேசிக்கப்பட்ட திருப்போரூர் வட்டம்* | | *எஞ்சிய செங்கல்பட்டு வட்டம்* | |
|---|---|---|---|---|---|
| *குறுவட்டம்* | *கிராம எண்ணிக்கை* | *குறுவட்டம்* | *கிராம எண்ணிக்கை* | *குறுவட்டம்* | *கிராம எண்ணிக்கை* |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| செங்கல்பட்டு | 25 | | | செங்கல்பட்டு | 25 |
| பாலூர் | 21 | | | பாலூர் | 11 |
| | | | | ஆப்பூர்* | 10 |
| காட்டாங்கொளத்தூர் | 26 | | | காட்டாங்கொளத்தூர் | 13 |
| | | | | சிங்கபெருமாள்கோவில்* | 13 |
| கூடுவாஞ்சேரி | 25 | | | கூடுவாஞ்சேரி | 11 |
| | | | | வண்டலூர் | 14 |
| திருப்போரூர் | 19 | திருப்போரூர் | 16 | **மொத்தம்** | *97* |
| கேளம்பாக்கம் | 25 | கேளம்பாக்கம் | 13 | | |
| | | மாம்பாக்கம்* | 12 | | |
| கரும்பாக்கம் | 27 | கரும்பாக்கம் | 16 | | |
| | | நெல்லிக்குப்பம் | **14 | | |
| மானாமதி | 25 | மானாமதி | 12 | | |
| | | பையனூர்* | 13 | | |
| **மொத்தம்** | **193** | **மொத்தம்** | **96** | | |

**திருப்போரூர் குறு வட்டத்திலிருந்து –3
கரும்பாக்கம் குறு வட்டத்திலிருந்து –11

*–புதிய குறுவட்டங்கள்

*(iii)* புதிய திருப்போரூர் வட்டம் உருவாக்குவது குறித்து நிலை படிவத்தை முதன்மைச்செயலாவர்/வருவாய் நிருவாக ஆணையர் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *வட்டம் தற்போது உள்ளபடி செங்கல்பட்டு வட்டம்* | *கோரிக்கையின்படி உத்தேசிக்கப்பட்ட திருப்போரூர் வட்டம்* | *எஞ்சிய செங்கல்பட்டு வட்டம்* | *அரசாணை எண் 279.வ.து.நாள், 9–06–2003ன்படி குறித்த நிலை* |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1 | தலைமையிடம் | செங்கல்பட்டு | திருப்போரூர் | செங்கல்பட்டு | |
| 2 | பரப்பளவு (ச.கி.மீ.) | செங்கல்பட்டு 779 ச.கி.மி. | திருப்போரூர் 423 ச.க.மீ | செங்கல்பட்டு 356 ச.கி.மீ. | குறைந்த அளவு 250 ச.கி.மீ முதல் அதிகளவு 2000 ச.கி.மீ |
| 3 | மக்கள் தொகை | 5,68,380 | திருப்போரூர் 1,72,526<br>5,50,000 | செங்கல்பட்டு 3,95,854 அதிகளவு | குறைந்த அளவு 1,00,000 முதல் |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | செங்கல்பட்டு | — |
| 5 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | 32. செங்கல்பட்டு<br>33. திருப்போரூர் | 33. திருப்போரூர் | 32. செங்கல்பட்டு | — |
| 6 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | — |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | செங்கல்பட்டு மறைமலைநகர் | இல்லை | செங்கல்பட்டு மறைமலைநகர் | — |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1. காட்டாங் கொளத்தூர்<br>2. திருப்போரூர் | திருப்போரூர் | காட்டாங்கொளத்தூர் | — |
| 9 | சிறப்பு பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1. நந்திவனம் கூடுவாஞ்சேரி<br>2. திருப்போரூர் | திருப்போரூர் | நந்திவரம்–கூடுவாஞ்சேரி | — |
| 10 | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 1. செங்கல்பட்டு<br>2. பாலூர்<br>3. காட்டாங் கொளத்தூர்<br>4. கூடுவாஞ்சேரி<br>5. திருப்போரூர்<br>6. கேளம்பாக்கம்<br>7. கரும்பாக்கம்<br>8. மானாமதி | 1. திருப்போரூர்<br>2. கேளம்பாக்கம்<br>3. கரும்பாக்கம்<br>4. மானாமதி<br>5. நெல்லிக்குப்பம்<br>6. மாம்பாக்கம்<br>7. பையனூர் | 1. செங்கல்பட்டு<br>2. பாலூர்<br>3. காட்டாங்கொளத்தூர்<br>4. கூடுவாஞ்சேரி<br>5. ஆப்பூர்<br>6. சிங்கபெருமாள்கோயில்<br>7. வண்டலூர் | — |
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 193 | திருப்போரூர் 96 | செங்கல்பட்டு 97 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 12 | கிராம பஞ்சாயத்துக் களின் எண்ணிக்கை | 89 | திருப்போரூர் 50 | செங்கல்பட்டு 39 | — |
| 13 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமம் பெயர் | கானாத்தூர் ரெட்டிக்குப்பம் (42 கி.மீ.) | கானாத்தூர் ரெட்டிக்குப்பம் (18 கி.மீ.) | நெடுங்குன்றம் (23 கி.மீ.) | — |

*(iv)* மேற்காணும் •விவரங்களின் படி, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள்: 9–6–2003–ன்படி புதிய வட்டம் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களான பரப்பளவு, மக்கள்தொகை மற்றும் கிராமங்கன் எண்ணிக்கை ஆகியவற்றை உத்தேசிக்கப்படும் திருப்போரூர் வட்டம் பூர்த்தி செய்கிறது; எனவே காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் பரிந்துவையின் அடிப்படையில் புதிய நிருபிபோரூர் வட்டம் அமைக்கலாம் என்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் தெரிரித்துள்ளார்.

*(v)* மேற்படி உத்தேசிக்கப்படும் திருப்போரூர் வட்டத்தில் பையனூர், நெல்லிக்குப்பம் மற்றும் மாம்பாக்கம் ஆகிய மூன்று குறுவட்டங்களை உருவாக்கவும், எஞ்சிய செங்கல்பட்டு வட்டத்தில் ஆப்பூர், சிங்கப்பெருமாள்கோயில் மற்றும் வண்டலூர் ஆகிய மூன்று குறுவட்டங்கள் உருவாக்கும்படியும் முதன்மைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

*(vi)* உத்தேசிக்கப்படும் புதிய திருப்போரூர் வட்டத்திற்கான பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு ஏற்படுத்துமாறு முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| *வ.எண்* | *பணியிடத்தின் பெயர்* | *செங்கல்பட்டு வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள்* | | | *செங்கல்பட்டு வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள்* | *செங்கல்பட்டு வட்டத்தில் புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்* | *திருப்போரூர் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள்* | *திருப்போரூர் வட்டத்திற்கு புதிதாகத் தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள்* | *திருப்போரூர் வட்டத்திற்கு அனுமதிக்கப் படவேண்டிய மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(6+7)* |
| | | *நி* | *த* | *மொ* | | | | | |
| **அ.** | **பொதுப்பிரிவு** | | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | 2 | – | 2 | 2 | – | – | 2 | 2 |
| 4 | உதவியாளர் | 4 | 1 | 5 | 5 | – | – | 5 | 5 |
| 5 | வருவாய் ஆய்வாளர் | 8 | – | 8 | 7 | – | 1 | 6 | 7 |
| 6 | இளநிலை உதவியாளர் | 2 | – | 2 | 2 | – | – | 2 | 2 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | தட்டச்சர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 8 | ஓட்டுநர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 9 | பதிவறை எழுத்தர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | 11 | – | 11 | 9 | – | 2 | 7 | 9 |
| 11 | இரவுக்காவலர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 12 | மசால்சி | – | – | – | – | 1* | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **33** | **1** | **34** | **31** | **1** | **3** | **29** | **32** |
| **ஆ.** | **சமூக பாதுகாப்புத் திட்டம்** | | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3 | இளநிலை உதவியாளர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 4 | அலுவலக உதவியாளர்** | – | – | – | – | 1 | – | 1 | 1 |
| 5 | ஓட்டுநர் | – | – | – | – | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **3** | **–** | **3** | **3** | **2** | **–** | **5** | **5** |
| **இ.** | **தேர்தல் பிரிவு** | | | | | | | | |
| 1 | துணை வட்டாட்சியர் | – | 1 | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **1** | **1** | **2** | **2** | **–** | **–** | **2** | **2** |
| **ஈ.** | **வட்ட வழங்கல் பிரிவு** | | | | | | | | |
| 1 | வட்ட வழங்கல் அலுவலர் | 0 | 1 | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 0 | 1 | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3 | தனி வருவாய் ஆய்வாளர் (கு.பொ.) | 0 | 2 | 2 | 2 | – | – | 1 | 1 |
| 4 | இளநிலை உதவியாளர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **1** | **4** | **5** | **5** | **–** | **–** | **5** | **5** |
| | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ)** | **38** | **6** | **44** | **41** | **3** | **3** | **41** | **44** |
| **உ.** | **நில அளவைப் பிரிவு** | | | | | | | | |
| 1. | வட்ட துணை ஆய்வாளர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 2. | வட்ட சார் ஆய்வாளர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 3. | நகர சார் ஆய்வாளர் | 1 | – | 1 | 1 | – | – | – | – |
| 4. | குறுவட்ட நில அளவர் | 8 | – | 8 | 7 | – | 1 | 6 | 7 |
| 5. | முதுநிலை வரைவாளர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 6. | இளநிலை வரைவாளர் | 1 | – | 1 | 1 | – | – | 1 | 1 |
| 7. | புல உதவியாளர் | 2 | – | 2 | 2 | – | – | 2 | 2 |
| | **மொத்தம்** | **15** | **–** | **15** | **14** | **–** | **1** | **12** | **13** |
| | **ஆக மொத்தம்** | **53** | **6** | **59** | **55** | **3** | **4** | **53** | **57** |

எனவே, புதிய திருப்போரூர் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு **44** பணியிடங்களையும் (புதிய பணியிடம் **41+** செங்கல்பட்டு வட்டத்திலிருந்து மாற்றம் **3**), நில அளவை பிரிவிற்கு **13** பணியிடங்களையும் (புதிய பணியிடம் **12+** செங்கல்பட்டு வட்டத்திலிருந்து மாற்றம் **1**) அனுமதிக்குமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

(vii) மேலும் standard Pattern–படி, செங்கல்பட்டு வட்டத்திற்கு பொதுப்பிரிவில் 1 மசால்சி பணியிடத்தையும், சமூக பாதுகாப்பு திட்டப் பிரிவில் 12:1 விகிதாச்சார அடிப்படையில் 1 அலுவலக உதவியாளர் பணியிடமும் 1 ஓட்டுநர் பணியிடமும் (ஈப்பு ஏற்கனவே உள்ளது) வழங்க முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. உத்தேசிக்கப்படும் புதிய திருப்போரூர் வட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக தொடரும் மற்றும் தொடரா செலவினம் கீழ்க்கண்டவாறு ஏற்படும் என முதன்மைச்செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

**I. தொடரும் செலவினங்கள்:**

| வ.எண் | விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு) | 1,69,74,144 |
| 2 | வாடகை | 1,44,000 (12,000X12) |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 (20000x6 months) |
| 4. | எரிபொருள் (டீசல்) | 1,68,000 (140லிxரூ50x12 மாதங்கள் X2 ஈப்புக்கு) |
| 5. | தொலைபேசி கட்டணம் | 25,500 ரூ.4,250x6 மாதங்களுக்கு |
| | **மொத்தம்** | **1,74,31,644** |

**II. தொடரா செலவினங்கள்:**

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | அலுவலக கட்டிடம் | 1 | 2,02,86,000 |
| 2 | வட்டாட்சியர் குடியிருப்பு | 1 | 19,32,000 |
| 3 | தளவாடங்கள் | – | 6,07,300 |
| 4 | ஈப்பு | 2 (ஒன்றிற்கு 5,56,000) | 11,12,000 |
| 5 | தொலைபேசி இணைப்பு | 2 | 6,000 |
| 6 | கணினி | 3 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு இயந்திரம்) | 3 | 25,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) இயந்திரம் | 1 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 2 | 10,000 |
| 12 | மிதிவண்டி, சுவர்க்கடிகாரம் பணப்பெட்டி | | 10,000 |
| | **மொத்தம்** | – | **2,41,63,300** |

4. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

(i) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்திலுள்ள 8 குறுவட்டங்களில் செங்கற்பட்டு குறுவட்டத்தை தவிர்த்து, மீதமுள்ள 7 குறுவட்டங்களை சீரமைத்து திருப்போரூர், கேளம்பாக்கம், கரும்பாக்கம், மானாமதி, நெல்லிக்குப்பம், மாம்பாக்கம் மற்றும் பையனூர் ஆகிய 7 குறுவட்டங்களை உள்ளடக்கி, புதிய திருப்போரூர் வட்ட இணைப்பு (1)–ல் கண்டுள்ளவாறு உருவாக்கப்படுகிறது.

(ii) ஏழு உள்வட்டங்கள் அடங்கிய செங்கல்பட்டு வட்டத்தில், பொதுப்பிரிவிற்கு 43 பணியிடங்களையும், நில அளவைப் பிரிவிற்கு 14 பணியிடங்களையும் நிறுத்தி வைத்து, பொதுப்பிரிவில் மேலும் 3 பணியிடங்களையும், ஏழு உள்வட்டங்கள் அடங்கிய புதிய திருப்போரூர் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 44 பணியிடங்களும் (செங்கல்பட்டு வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 3 பணியிடங்கள்+ புதிதாக தோற்றுவித்தல் மூலம் 41 பணியிடங்கள்) நில அளவைப் பிரிவிற்கு 13 பணியிடங்களும் (செங்கல்பட்டு வட்டத்திலிருந்து மறுபரவலமர்த்தல் மூலம் 1 பணியிடம் + புதிதாக தோற்றுவித்தல் மூலம் 12 பணியிடங்கள்) தோற்றுவிக்கப்படுகிறது.

(iii) புதியதாக உருவாக்கப்படும் திருப்போரூர் வட்டத்திற்கு புதிதாக 53 பணியிடங்கள் வெவ்வேறு நிலைகளில் தோற்றுவிக்கப்படுவதால், தொடரும் செலவினமாக ஆண்டுக்கு ரூ. 1,74,31,644/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தி நான்கு இலட்சத்து முப்பத்தோராயிரத்து அறுநூற்று நாற்பத்து நான்கு மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(iv) புதிதாக உருவாக்கப்படும் திருப்போரூர் வட்டத்திற்கு தொடராச் செலவினமாக ரூ. 2,41,63,300/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொன்று லட்சத்து அறுபத்தி மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**(அ) பணியாளர் சம்பளங்கள்**

(i) வருவாய் பணியிடங்கள் ரூ. 1,69,72,144/–
2053 00 மாட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு–1 திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளரமைப்புகள் – 01 சம்பளங்கள்
(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள் ரூ. 1000/–
2029 00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் – I திட்டத்தில் சேராதது– AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்
(த.தொ.கு. 2029 00 102 AF 0105)

(III) குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ. 1000/–
3456 – 00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளர் அமைப்பு – 01 சம்பளங்கள்
(த.தொ.கு. 3456 00 001 AB 0108)

(ஆ) தொலைபேசி கட்டணங்கள் – ரூ. 31.500/–
05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள்
(த.தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) சில்லறை செலவனங்கள் – ரூ. 10,000/–
05 அலுவலக செலவுகள் 02 ஏனைய சில்லரை செலவுகள்
(த.தொ.கு. 2053 00 094 AB 0522)

(ஈ) மின் கட்டணங்கள் – ரூ. 1,20,000/–
05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள்
(த.தொ.கு. 2053 00 094 AB 0531)

(உ) 05 05 அறைகலன் ரூ. 6,07,300/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு. 2053 00 094 AB 0559)

(ஊ) வாடகை செலவினங்கள்–ரூ. 1,44,000/–
06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை
(த.தொ.கு. 2053 00 094 AB 0611)

(எ) இயந்திரமும், சாதனமும் வாங்குதல் –ரூ. 1,10,000/–
19 இயந்திரமும், சாதனமும் 01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 094 AB 1914

(ஏ) வாகனங்கள் வாங்குதல் – 11,12,000/–
21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 2119)

(ஐ) பெட்ரோலியம் மற்றும் டீசல் செலவினங்கள் – ரூ. 1,68,000/–
45 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்
(த.தொ.கு. 2053 00 094 AB 4500)

(ஒ) கணிணியும் துணை பாகங்களும் வாங்குதல்–ரூ. 1,00,000/–
76 கணிணியும் துணை பாகங்களும் 01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 7614)

(ஓ) அலுவலகக் கட்டடம் ரூ. 2,02,86,000/–
4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 அலுவலகக் கட்டடங்கள் – 051 கட்டுமானம் – பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JC நிலவரி – 16 பெரும்பணிகள்.
(த.தொ.கு. 4059 – 01–051–JC–1609)

(ஔ) வட்டாட்சியர் குடியிருப்பு ரூ. 19,32,000/–
4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு – 01 அரசு குடியிருப்பு கட்டடங்கள் – 106 பொது தொகுப்பு

இடவசதி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் JC வருவாய்த்துறை – வீட்டுவசதித் திட்டங்கள் 16 பெரும்பணிகள்
(த.தொ.கு. 4216 01 106 JC 1601)

**6.** மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணி குறித்து செலவினமாகும். (New Instrument of Service) இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.I)துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2012–2013 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது./வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7.** மேலே பத்தி 4 இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**8.** இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 62019/மை.ம.ஆ.பி./2012–1, நாள் 8–11–2012–இல் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 1537 (ஆயிரத்து ஐநூற்று முப்பத்தேழு)

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**இணைப்பு–1**

*[அரசாணை (நிலை) எண் 408, வருவாய்த்துறை, நாள் 21–11–2012.]*

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போதைய செங்கற்பட்டு வட்டத்ப் பிரித்து கீழ்க்கண்ட ஏழு குறுவட்டங்களை உள்ளடக்கி திருப்போரூரைத் தலையிடமாக கொண்டு புதிய திருப்போரூர் வட்டம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைக்களாக கொண்டு செயல்படும்.

**2.** புதிதாக உருவாக்கப்படும் திருப்போரூர் வட்டத்தில் உள்ளடங்கும் குறுவட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது செங்கற்பட்டு வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி திருப்போரூர் வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**அட்டவணை**

| வ.எண் | வட்டத்தின் பெயர் பெயர் | உள்வட்டங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | திருப்போரூர் | 1. திருப்போரூர் |
| | | 2. கேளம்பாக்கம் |
| | | 3. கரும்பாக்கம் |
| | | 4. மானாமதி |
| | | 5. நெல்லிக்குப்பம் |
| | | 6. மாம்பாக்கம் |
| | | 7. பையனூர். |

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

*தலைமைச் செயலகம், 2012 டிசம்பர் 12.*

**[ஆட்சி எல்லை – ஈரோடு மாவட்டம் – பவானி மற்றும் கோபிசெட்டிப்பாளையம் வட்டங்களைச் சீரமைத்து அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அந்தியூர் வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.]**

No. II(1)/REV/39/2012.

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது.

*[அரசாணை (நிலை) எண். 409, வருவாய் [வநி1(1)த் துறை, நாள் 21 நவம்பர் 2012.]*

• **•படிக்கவும்:**

1. முதன்மைச் செயலாளர் கடித எண். 6(4)/298723/09, நாள் 03–05–2012. மற்றும் 05–07–2012.

2. மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம் கடிதம் எண். ந.க. 45070/2010/ஈ1, நாள் 08–08–2011 மற்றும் 15–02–2012.

**ஆணை:—அரசாணை (நிலை) எண். 409, வருவாய் வ.நி.1 (1)த் துறை, 21 நவம்பர் 2012.**

கால விரையமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும் வட்டாட்சியர் அலுவலகம் திறம்படச் செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08–05–2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**“ஈரோடு மாவட்டம், பவானி மற்றும் கோபிசெட்டிப்பாளையம் வட்டங்களை சீரமைத்து புதியதாக அந்தியூர் வட்டம் தோற்றுவிக்கப்படும்.”**

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிக்கையின் அடிப்படையில், முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் புதிய அந்தியூர் வட்டம் உருவாக்குவது தொடர்பாக தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்:—

(i) மாவட்ட ஆட்சித் தலைவர் தனது 4–7–2012 நாளிட்ட கடிதத்தில், அம்மாபேட்டை குறுவட்டத்தில் உள்ள 10 வருவாய் கிராமங்களும், புதியதாக உருவாக்கப்படவுள்ள அந்தியூர் வட்டத்துடன் இணைத்தும், குறிச்சி குறுவட்டத்திலுள்ள 13 வருவாய் கிராமங்களில், 6 வருவாய் கிராமங்கள் அந்தியூர் வட்டத்துடன் சேர்த்தும் கோபிசெட்டிப்பாளையம் வட்டத்தில் உள்ள சிறுவலூர் குறுவட்டத்தில் உள்ள சந்திராபுரம் மற்றும் கூகலூர் குறுவட்டத்தில் உள்ள பி.மேட்டுப்பாளையம் மற்றும் பெருந்தலையூர் ஆகிய மூன்று வருவாய் கிராமங்களை பவானி வட்டம், கவுந்தப்பாடி குறுவட்டத்துடன் சேர்த்தும் புதிய அந்தியூர் வட்டம் அமைக்கலாம்.

(ii) மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின்படி, தற்போதுள்ள வட்டம், உத்தேசிக்கப்பட்ட வட்டம், எஞ்சிய வட்டம் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவை கீழ்கண்டவாறு அமையும் என்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்:—

| *தற்போதுள்ள வட்டம்* | | | | *உத்தேசிக்கப்பட்ட வட்டம்* | | *எஞ்சிய வட்டம்* | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| *பவானி* | | *கோபிசெட்டி பாளையம்* | | *அந்தியூர்* | | *பவானி* | | *கோபி செட்டி பாளையம்* | |
| அந்தியூர் | 5 | – | – | அந்தியூர் (5+6) | 11 | – | – | – | – |
| அத்தாணி | 8 | – | – | அத்தாணி | 8 | – | – | – | – |
| பர்கூர் | 1 | – | – | பர்கூர் | 1 | – | – | – | |
| அம்மாபேட்டை | 10 | – | – | அம்மாபேட்டை | 10 | – | – | – | – |
| குறிச்சி | 13 | – | – | | | குறிச்சி 13–16 | 7 | – | – |
| பவானி | 12 | – | – | | | பவானி | 12 | – | – |
| கவுந்தப்பாடி | 8 | – | – | | | கவுந்தப்பாடி (8+3) | 11 | – | – |
| | | கூகலூர் | 9 | | | | | கூகலூர் (9–2) | 7 |
| | | வாணிப்புத்தூர் | 16 | | | | | வாணிப்புத்தூர் | 16 |
| | | காசிபாளையம் | 6 | | | | | காசிபாளையம் | 6 |
| | | கோபிசெட்டி பாளையம் | 15 | | | | | கோபிசெட்டி பாளையம் | 15 |
| | | சிறுவலூர் | 8 | | | | | சிறுவலூர் | 7 |
| | | நம்பியூர் | 12 | | | | | நம்பியூர் | 12 |
| | | எலத்தூர் | 10 | | | | | எலத்தூர் | 10 |
| மொத்த கிராமங்கள் | 57 | மொத்த கிராமங்கள் | 76 | மொத்த கிராமங்கள் | 30 | மொத்த கிராமங்கள் | 30 | மொத்த கிராமங்கள் | 73 |

**(iii) புதிய அந்தியூர் வட்டம் அரசு ஆணை எண். 279, வருவாய்த்துறை, நாள் 09–06–2003–ன்படி கீழ்கண்டவாறு அமையும்:—**

| *வ. எண்.* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *தற்போது உள்ளபடி* | | *உத்தேச பிரிவினைக்கு பின் வட்டம்* | | | | *அரசாணை எண் 279, வ.து. நாள்: 09–06–2003–ன்படி குறித்த நிலைப்படி.* |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | *பவானி* | *கோபி செட்டி பாளையம்* | *உத்தேசிக்கப்பட்ட வட்டம்* | | *எஞ்சிய வட்டம்* | | – |
| | | | | | *அந்தியூர்* | *பவானி* | *கோபிசெட்டி பாளையம்* | – |
| 1. | தலைமையிடம் | பவானி | கோபிசெட்டிபாளைம் | | அந்தியூர் | பவானி | கோபி செட்டி பாளையம். | – |
| 2. | பரப்பளவு (ச.கி.மீ.) | 696.15 | 536.21 | பவானி வட்டத்திலிருந்து | 405.75 | 290.40 | 513.10 | 250 ச.கி.மீ. முதல் 2000 ச. கி.மீ. வரை |
| | | | | கோபி வட்டத்திலிருந்து | – | 23.11 | | |
| | | | | **மொத்தம்** | **405.75** | **313.51** | | |
| 3. | மக்கள் தொகை | | | பவானி வட்டத்திலிருந்து | 224650 | 234395 | 3,51,126 | 1,00,000முதல் 5,50,000வரை |
| | | | | கோபி வட்டத்திலிருந்து | | 14085 | | |
| | | | | **மொத்தம்** | **224650** | **248480** | | |
| 4. | வருவாய் கோட்டத்தின் பெயர் | | கோபிசெட்டி பாளையம் | | கோபிசெட்டி பாளையம் | கோபிசெட்டி பாளையம் | | |
| 5. | சட்டமன்றதொகுதியின் பெயர் | 104 பவானி<br>105 அந்தியூர் | 105 அந்தியூர்<br>106 கோபிசெட்டி பாளையம். | | அந்தியூர் பவானி | பவானி கோபி | அந்தியூர் கோபிசெட்டி பாளையம். | |
| 6. | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | திருப்பூர் | திருப்பூர் | | திருப்பூர் | திருப்பூர் | | |
| 7. | நகராட்சிஎண்ணிக்கை பெயர் | பவானி | கோபிசெட்டி | | இல்லை. | பவானி | கோபிசெட்டி பாளையம் | |
| 8. | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை/பெயர் | 1. பவானி<br>2. அந்தியூர்<br>3. அம்மாபேட்டை | 1. கோபி<br>2. நம்பியூர்<br>3. தூக்கநாயக்கன் பாளையம் | | 1. அந்தியூர் (முழுவதும்)<br>2.அம்மாபேட்டை (பகுதியாக) | 1. பவானி (முழுவதும்)<br>2. அம்மாபேட்டை (பகுதியாக) | 1. கோபிசெட்டி பாளையம் (பகுதியாக)<br>2. நம்பியூர் (முழுவதும்)<br>3. தூக்க நாயக்கன் பாளையம் (முழுவதும்) | |
| 9. | சிறப்பு பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை/பெயர் | 1. சலங்கபாளையம்<br>2. ஜம்பை<br>3. ஆப்பக்கூடல்<br>4. அம்மாபேட்டை<br>5. நெரிஞ்சிப்பேட்டை<br>6. அந்தியூர்<br>7. அத்தாணி<br>8. ஒலகடம் | 1.நம்பியூர்<br>2. எலத்தூர்<br>3. லக்கம்பட்டி<br>4. கொளப்பலூர்<br>5. காசிபாளையம்<br>6. வாணிப்புதூர்<br>7. பெரியகொடிவேரி<br>8. கூகலூர்<br>9. பி. மேட்டுப்–பாளையம் | | 1.அந்தியூர்<br>2.அத்தாணி<br>3.அம்மாபேட்டை<br>4.நெரிஞ்சிப் பேட்டை | 1.ஒலகடம்<br>2.ஜம்பை<br>3.ஆப்பக்கூடல்<br>4.சலங்கபாளையம்<br>5. பி.மேட்டுப் பாளையம் | 1. நம்பியூர்<br>2. எலத்தூர்<br>3. லக்கம்பட்டி<br>4. கொளப்பலூர்<br>5. காசிபாளையம்<br>6. வாணிப்புத்தூர்<br>7. பெரிய கொடிவேரி<br>8. கூகலூர். | |

| வ. எண். | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ளபடி | | உத்தேச பிரிவினைக்கு பின் வட்டம் | | | அரசாணை எண் 279, வ.து. நாள்: 09–06–2003–ன்படி குறித்த நிலைப்படி. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பவானி | கோபி செட்டி பாளையம் | உத்தேசிக்கப்பட்ட வட்டம் அந்தியூர் | எஞ்சிய வட்டம் பவானி | – | – |
| 10. | உள்வட்டங்களின் எண்ணிக்கை/பெயர் | 7<br>1. அந்தியூர்<br>2. அத்தாணி<br>3. பர்கூர்<br>4. அம்மாபேட்டை<br>5. குறிச்சி<br>6. பவானி<br>7. கவுந்தப்பாடி | 7<br>1. வாணிப்புத்தூர்<br>2. காசிபாளையம்<br>3. கோபிசெட்டி<br>4. சிறுவளர் பாளையம்<br>5. கூகலூர்<br>6. நம்பியூர்<br>7. எலத்தூர் | 4<br>1. அந்தியூர்<br>2. அத்தாணி<br>3. பர்கூர் | 3<br>1. குறிச்சி<br>2.பவானி<br>3.கவுந்தப்பாடி<br>4.அம்மாபேட்டை | 7<br>1. வாணிப்புத்தூர்<br>2. காசிப்பாளையம்<br>3. கோபிசெட்டிபாளையம்<br>4. சிறுவலூர்<br>5. கூகலூர்<br>6. நம்பியூர்<br>7. எலத்தூர். | |
| 11. | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 57 | 76 | 30 | 30 | 73 | குறைந்த அளவு 30 வருவாய் கிராமங்கள் |
| 12 | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | 49 | 46 | 26 | 25 | 44 | |
| 13. | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராம பெயர்/தூரம் | பர்கூர் மலைப் பிரதேசத்தில் உள்ள பர்கூர் 52 கி.மீ. கத்திரிமலை 72கி.மீ. கொங்காடை 60 கி.மீ. குட்டையூர் 90 கி.மீ. | 32 கி.மீ.<br>52கி.மீ.<br>40 கி.மீ.<br>70 கி.மீ. | – | – | | |

(iv) **புதிய அந்தியூர் வட்டத்திற்கு பொதுப் பிரிவில் 40 பணியிடங்களையும், நில அளவைப் பிரிவில் 11 பணியிடங்களையும் ஆக மொத்தம் 51 பணியிடங்களையும் கீழ்க்கண்டவாறு அனுமதிக்குமாறு வருவாய் நிருவாக இணை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.**

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | பவானி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | பவானி வட்டத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய பணியிடங்கள் | பவானி வட்டத்திலிருந்து புதிய அந்தியூர் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | அந்தியூர் வட்டத்திற்கு புதிதாகத் தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | அந்தியூர் வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| **அ.** | **பொதுப்பிரிவு** | | | | | |
| 1. | வட்டாட்சியர் | 1 – | 1 | – | 1 | 1 |
| 2. | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 – | 1 | – | 1 | 1 |
| 3. | உதவியாளர் | 7 – | 4 | 3 | 1 | 4 |
| 4. | நில வருவாய் ஆய்வாளர். | 7 – | 3 | 4 | – | 4 |
| 5. | இளநிலை உதவியாளர் | 5 – | 3 | 2 | 1 | 3 |
| 6. | பதிவறை எழுத்தர் | 1 – | 1 | – | 1 | 1 |
| 7. | தட்டச்சர் | 2 – | 1 | 1 | – | 1 |

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | பவானி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | | பவானி வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள் | பவானி வட்டத்திலிருந்து புதிய அந்தியூர் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | அந்தியூர் வட்டத்திற்கு புதிதாகத் தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | அந்தியூர் வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | (5) | (6) | (7) |
| 8. | அலுவலக உதவியாளர் | 5 | – | 5 | – | 6 | 6 |
| 9. | ஈப்பு ஓட்டுநர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| 10. | மண்டல துணை வட்டாட்சியர் | – | 3 | 1 | 2 | – | 2 |
| 11. | கணினி இயக்குபவர் (தொகுப்பூதியம்)–1 | – | 1 | 1 | – | 1 | 1 |
| 12. | மாசால்சி | – | – | – | – | 1 | 1 |
| 13. | இரவு காவலர் | – | – | – | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **30** | **4** | **22** | **12** | **15** | **27** |
| **ஆ.** | **சமூக பாதுகாப்புத் திட்டம்** | | | | | | |
| 1. | வட்டாட்சியர் | – | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | உதவியாளர் | – | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | – | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | கணினி இயக்குபவர் | – | – | – | – | 1 | 1 |
| 5 | அலுவலக உதவியாளர் (தேர்தல் பிரிவிலிருந்து மாற்றம்.) | – | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **–** | **4** | **4** | **–** | **5** | **5** |
| **இ.** | **தேர்தல் பிரிவு** | | | | | | |
| 1. | துணை வட்டாட்சியர் | – | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | உதவியாளர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **1** | **1** | **2** | **–** | **2** | **2** |
| **ஈ.** | **சிறப்பு செயலாக்கத் திட்டம்** | | | | | | |
| 1. | துணை வட்டாட்சியர் | – | 1 | 1 | – | 1 | 1 |
| | **மொத்தம்** | **–** | **1** | **1** | **–** | **1** | **1** |
| **உ.** | **வட்ட வழங்கல் பிரிவு** | | | | | | |
| 1. | வட்ட வழங்கல் அலுவலர் | – | 1 | 1 | – | 1 | 1 |
| 2. | உதவியாளர் | – | 1 | 1 | – | 1 | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | – | 1 | 1 | – | 1 | 1 |
| 4. | தனி வருவாய் ஆய்வாளர். | – | 2 | 2 | – | 2 | 2 |
| 5. | அலுவலக உதவியாளர். | – | 1 | 1 | – | – | – |

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | பவானி வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | | பவானி வட்டத்தில் நிறுத்திவைக்க வேண்டிய பணியிடங்கள் | பவானி வட்டத்திலிருந்து புதிய அந்தியூர் வட்டத்திற்கு மாற்றம் செய்ய வேண்டிய பணியிடங்கள் | அந்தியூர் வட்டத்திற்கு புதிதாகத் தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | அந்தியூர் வட்டத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | (5) | (6) | (7) |
| | **மொத்தம்** | **–** | **6** | **6** | **–** | **5** | **5** |
| | **கூடுதல் (அ+ஆ+இ+ஈ)** | **31** | **16** | **35** | **12** | **28** | **40** |
| **ஊ.நில அளவைப் பிரிவு** | | | | | | | |
| 1. | வட்ட துணை ஆய்வாளர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| 2 | வட்ட சார் ஆய்வாளர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| 3. | உள்வட்ட அளவர் | 7 | – | 3 | 4 | – | 4 |
| 4. | முதுநிலை வரைவாளர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| 5. | வட்ட ஆவண வரைவாளர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| 6. | நகர சார் ஆய்வாளர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| 7. | நத்தம் சார் ஆய்வாளர் | 1 | – | 1 | – | 1 | 1 |
| 8. | புல உதவியாளர் | 3 | – | 2 | 1 | – | 1 |
| | **மொத்தம்** | **16** | **–** | **11** | **5** | **6** | **11** |
| | கூடுதல் (அ+ஆ+இ+ஈ) | 31 | 16 | 35 | 12 | 28 | 40 |
| | கூடுதல் (ஊ) | 16 | – | 11 | 5 | 6 | 11 |
| | **ஆக மொத்தம்** | **47** | **16** | **46** | **17** | **34** | **51** |

3, புதிய அந்தியூர் வட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக தொடரும் மற்றும் தொடரா செலவினம் கீழ்கண்டவாறு ஆகும் எனத் தெரிவித்துள்ளார்.

**I. தொடரும் செலவினங்கள்:**

| வ.எண். | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் (ஆண்டொன்றுக்கு தோராயமாக) | 1,63,95,600 |
| 2 | வாடகை | 1,44,000 (12,000 X 12) |
| 3 | மின்சாரக் கட்டணம் | 1,20,000 (20000 X 6 months) |
| 4 | எரிபொருள் (டீசல்) | 1,68,000 (140லிX ரூ.50 X 12 மாதங்கள் X 2= ஈப்புக்கு) |
| 5. | தொலைபேசி கட்டணம் | 25,500 ரூ. 4,250 X 6 மாதங்களுக்கு |
| | **மொத்தம்** | **1,68,53,100/–** |

**II. தொடரா செலவினங்கள்**

| *வ.எண்.* | *விவரம்* | *எண்ணிக்கை* | *தொகை ரூ* |
|---|---|---|---|
| 1 | அலுவலக கட்டிடம் | 1 | 2,02,86,000 |
| 2 | வட்டாட்சியர் | 1 | 19,32,000 |
| 3 | தளவாடங்கள் | – | 6,07,300 |
| 4 | ஈப்பு | 2 (ஒன்றிற்கு) | 11,12,000 |
| 5 | தொலைபேசி | 2 | 6,000 |
| 6 | கணினி | 3 | 75,000 |
| 7 | பிரிண்டர் (அச்சுப்பதிப்பு) இயந்திரம். | 3 | 25,000 |
| 8 | ஜெராக்ஸ் (நகல்) | 1 | 65,000 |
| 9 | பேக்ஸ் | 1 | 10,000 |
| 10 | குளிர்சாதனம் | 1 | 25,000 |
| 11 | தீயணைப்பான் | 2 | 10,000 |
| | **மொத்தம்** | **–** | **2,41,53,300** |

4. மேற்காணும் சூழ்நிலையில், முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் இணை ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:—

(i) ஈரோடு மாவட்டம், பவானி மற்றும் கோபிசெட்டிப்பாளையம் வட்டங்களை சீரமைத்து புதிய அந்தியூர் வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) அவ்வாறு உருவாக்கப்படும் புதிய அந்தியூர் வட்டத்திற்கு, மறுபரவலமரத்தல் மூலம் பவானி வட்டத்திலிருந்து 17 பணியிடங்களை மாற்றம் செய்தும் புதிய அந்தியூர் வட்டத்திற்கு புதிதாக 34 பணியிடங்களும் தோற்றுவிக்கப்படுகிறது.

(iii) புதியதாக உருவாக்கப்பட்டுள்ள அந்தியூர் வட்டத்திற்கு தொடரும் செலவினமாக ரூ. 1,68.53.100/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து நூறு மட்டும்) மற்றும் தொடரா செலவினமாக ரூ. 2,41,53,300/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) நிதித்துறையின் ஒப்புதலின்படி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**(அ) பணியாளர் சம்பளங்கள்**

(i) வருவாய் பணியிடங்கள் – ரூ. 1,63,93,600/–

2053 00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு – 1
திட்டத்தில் சேராதது–AB வட்டப் பணியாளரமைப்புகள்–01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0102)

(ii) நில அளவைப் பணியிடங்கள் – ரூ. 1,000/–

2029 – 00 நில வருவாய் – 102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள் –I
திட்டத்தில் சேராதது – AF நில அளவை பராமரிப்பு பணி – 01 சம்பளங்கள்

(த.தொ.கு. 2029 00 102 AF 0105)

(iii) குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ. 1,000/–

3456 00 நுகர்பொருள் வழங்கல் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I
திட்டத்தில் சேராதது AB வட்டப் பணியாளர் அமைப்பு–01 சம்பளங்கள்

(த.தொ.கு. 3456 00 001 AB 0108)

(ஆ) தொலைபேசி கட்டணங்கள் ரூ. 31,500/–
05 அலுவலக செலவுகள் 01 தொலைப்பேசி கட்டணங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) மின் கட்டணங்கள் ரூ. 1,20,000/–
05 அலுவலக செலவுகள் 01 மின் கட்டணங்கள்

(த.தொ.கு. 2053 00 094 AB 0531)

(ஈ) 05 05 அறைகலன் ரூ. 6,07,300/–
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்

(த.தொ.கு. 2053 00 094 AB 0559)

(உ) வாடகைச் செலவினங்கள் ரூ. 1,44,000/–
06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை

(த.தொ.கு. 2053 00 094 AB 0611)

(ஊ) இயந்திரமும், சாதனமும் வாங்குதல் ரூ. 1,10,000/–
19 இயந்திரமும், சாதனமும் 01 வாங்குதல்

(த.தொ.கு. 2053 00 094 AB 1914)

(எ) வாகனங்கள் வாங்குதல் ரூ. 11,12,000/–
21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல்

(த.தொ.கு. 2053 00 094 AB 2119)

(ஏ) பெட்ரோலியம் மற்றும் டீசல் செலவினங்கள் – ரூ. 1,68,000/–
45 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்

(த.தொ.கு. 2053 00 094 AB 4500)

(ஐ) கணினியும் துணை பாகங்களும் ரூ. 1,00,000/–
76 கணினியும் துணை பாகங்களும் 01 வாங்குதல்
(த.தொ.கு. 2053 00 094 AB 7614)

(ஒ) அலுவலகக் கட்டடம் ரூ. 2,02,86,000/–

4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு – 01 அலுவலகக் கட்டடங்கள் – 051 கட்டுமானம் – பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JC – நிலவரி – 16 பெரும்பணிகள்.

(த.தொ.கு. 4059 – 01 – 051 JC – 1609)

(ஓ) வட்டாட்சியர் குடியிருப்பு ரூ. 19,32,000/–

4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு – 01 அரசு குடியிருப்பு கட்டடங்கள் – 106 – பொது தொகுப்பு இடவசதி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II – மாநில திட்டம் JC வருவாய்த்துறை – வீட்டுவசதித் திட்டங்கள் 16 பெரும்பணிகள்.

(த.தொ.கு. 4216 – 01 – 106 JC – 1601)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதிய துணைப்பணியாகும். (New Instrument of Service). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும் இதற்கான ஆணை நிதி (வ.செ. I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வ.செ.பொ. 1/வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலை பத்தி 4–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 61960/மை.ம.ஆபி/2012–1, நாள் 08–11–2012–இல் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண். 1540 (ஆயிரத்து ஐநூற்று நாற்பது)

(ஆளுநரின் ஆணைப்படி)

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**இணைப்பு—I**

*[அரசாணை (நிலை) எண் 409, வருவாய்த் துறை, நாள் 21—11—2012.]*

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், ஈரோடு மாவட்டத்தில் தற்போதைய பவானி மற்றும் கோபிசெட்டிப்பாளையம் வட்டங்களைச் சீரமைத்து குறிச்சி குறுவட்டத்திலுள்ள 13 வருவாய் கிராமங்களில் 6 வருவாய் கிராமம் அந்தியூர் வட்டங்களைச் சேர்த்தும் கீழ்க்கண்ட அந்தியூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அந்தியூர் வட்டம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

**2.** புதிதாக உருவாக்கப்படும் அந்தியூர் வட்டத்தில் உள்ளடங்கும் குறுவட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது பவானி மற்றும் கோபிசெட்டிபாளையம் வட்டாட்சியர்களால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி அந்தியூர் வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22—ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**அட்டவணை**

| *வ.எண்.* | *வட்டத்தின் பெயர்* | *குறுவட்டங்களின் பெயர்* |
|---|---|---|
| 1 | அந்தியூர் | 1. அந்தியூர் |
| | | 2. அத்தாணி |
| | | 3. பர்கூர் |
| | | 4. அம்மாபேட்டை |

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

*தலைமைச் செயலகம், 2012 டிசம்பர் 12.*

**[ஆட்சி எல்லை—பெரம்பலூர் மாவட்டம்—குன்னம் வட்டத்தினை பிரித்து ஆலத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஆலத்தூர் வட்டம் உருவாக்குதல்—ஆணை வெளியிடப்படுகிறது.]**

No. II(1)/REV/40/2012—

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை) எண் 410, வருவாய் (வ.நி—1(1))த் துறை, 2012 நவம்பர் 21]*

**படிக்கவும்:**

(1) அரசு கடித எண் 50000/வ.நி.1(1)/10—1, நாள் 11—11—2010.

(2) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க. பணி 6(4)/28998/2008, நாள் 31—12—2010.

(3) அரசு கடித எண் 50000/வ.நி.1(1)/2010, நாள் 14—06—2012.

(4) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண் ந.க. பணி 6(4)/28998/2008, நாள் 26—06—2012.

********

**ஆணை: அரசாணை (நிலை) எண் 410, வருவாய் [வ.நி. 1(1)]த் துறை, 2012 நவம்பர் 21.**

கால விரையமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும், வட்டாட்சியர் அலுவலகம் திறம்பட செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 8—5—2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110 இன்கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**''பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டத்தினைப் பிரித்து புதிய ஆலத்தூர் வட்டம் தோற்றுவிக்கப்படும்.''**

**2.** மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர், முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து புதிய ஆலத்தூர் வட்டம் உருவாக்குவது தொடர்பாக கீழ்க்கண்டவாறு கருத்துரு பெறப்பட்டுள்ளது.

(i) கொளக்காநத்தம் குறுவட்டத்தில் அதிகமான வருவாய் கிராமங்கள், அதாவது 21 வருவாய் கிராமங்கள் உள்ளதாலும், செட்டிகுளம் குறுவட்டத்தில் 18 வருவாய் கிராமங்கள் உள்ளதாலும், செட்டிகுளம் குறுவட்டத்திலிருந்து 4 வருவாய் கிராமங்களை கொளக்காநத்தம் குறுவட்டத்துடன் சேர்த்து, மொத்தம் உள்ள 25 கிராமங்களில் 13 கிராமங்களை உள்ளடக்கி நிருவாக நலன் கருதி ''கூத்தூர்'' என்ற பெயரில் புதிய குறுவட்டம் ஒன்றை உருவாக்கலாம்.

(ii) குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆலத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைய வேண்டும் என்பது செட்டிகுளம் குறுவட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையாக இருப்பதால், குன்னம் வட்டத்தினை இரண்டாகப் பிரித்து, நிருவாக நலன் கருதி ''ஆலத்தூர்'' என்ற புதிய வட்டத்தை உருவாக்கலாம் என்றும், பொதுமக்கள் நலன்கருதியும், நிருவாக நலன் கருதியும் குன்னம் வட்டத்தினை சீரமைத்து செட்டிகுளம், கொளக்காநத்தம் மற்றும் புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்ட கூத்தூர் ஆகிய குறுவட்டங்களை உள்ளடக்கிய புதிய ''ஆலத்தூர்'' வட்டத்தினைத் தோற்றுவிக்கலாம்.

(iii) குன்னம் வட்டத்தில் தற்போது உள்ள குறுவட்டங்கள், வருவாய் கிராமங்கள் மற்றும் சீரமைப்பிற்குப் பின் புதியதாக உருவாக்கப்பட உள்ள ஆலத்தூர் வட்டத்தில் அமைய இருக்கும் குறுவட்டங்கள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமையும்.

(iv)

*தற்போது உள்ள நிலவரப்படி அமைந்துள்ள வட்டமும், அதன் வருவாய் கிராமங்களும்*

*வட்டம்: குன்னம்*
*(மொத்தம் உள்ள வருவாய் கிராமங்கள்: 86)*
*(குறுவட்டங்கள்:5)*

| | குறுவட்டங்கள் | | வருவாய் கிராமங்கள் |
|---|---|---|---|
| 1. | வடக்கலூர் | : | 15 |
| 2. | கீழப்புலியூர் | : | 17 |
| 3. | வரகூர் | : | 15 |
| 4. | செட்டிகுளம் | : | 18 |
| 5. | கொளக்காநத்தம் | : | 21 |
| | மொத்தம் | : | 86 |

*புதியதாக வட்டம் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் முன்மொழியும் வட்டத்தின் பெயரும் வருவாய் கிராமங்களும்*

*I. குன்னம்*
*(பிரிவினைக்குப்பின்)*
*மொத்தம் உள்ள வருவாய் கிராமங்கள் : 47*
*குறுவட்டங்கள்:3*

| | குறுவட்டங்கள் | | வருவாய் கிராமங்கள் |
|---|---|---|---|
| 1. | கீழப்புலியூர் | : | 17 |
| 2. | வரகூர் | : | 15 |
| 3. | வடக்கலூர் | : | 15 |
| | **மொத்தம்** | : | **47** |

II ஆலத்தூர் வட்டம்
(Newly Proposed)
மொத்த வருவாய் கிராமங்கள் : 39
குறுவட்டங்களின் எண்ணிக்கை : 3

| | குறுவட்டங்கள் | | வருவாய் கிராமங்கள் |
|---|---|---|---|
| 1. | செட்டிகுளம் | : | 14 |
| 2. | கொளக்காநத்தம் | : | 12 |
| 3. | கூத்தூர் (புதிதாக தோற்றுவிக்கும் குறுவட்டம்) | : | 13 |
| | | | 39 |

(iv) **அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003 இல் நிர்ணயித்த அளவுகோலின்படி வட்டத்தை பிரித்தலுக்கான படிவம் பின்வருமாறு:–**

| *வ. எண்* | *ஆட்சி எல்லை விளக்கங்கள்* | *வட்டம் தற்போது உள்ள குன்னம் வட்டம்* | *கோரிக்கையின்படி கோரப்பட்ட ஆலத்தூர் வட்டம்* | *எஞ்சிய குன்னம் வட்டம்* | *குறித்த நிலைப்படி* |
|---|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* | *6* |
| 1 | தலைமையிடம் | குன்னம் | ஆலத்தூர் | குன்னம் | — |
| 2 | பரப்பளவு (ச.கி.மீ) | 835.02 (ச.கி.மீ) | 408.43 (ச.கி.மீ) | 426.59 (ச.கி.மீ) | குறைந்த அளவு 250 ச.கி.மீ. முதல் அதிகளவு 2000 ச.கி.மீ. |

| வ. எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | வட்டம் தற்போது உள்ள குன்னம் வட்டம் | கோரிக்கையின்படி கோரப்பட்ட ஆலத்தூர் வட்டம் | எஞ்சிய குன்னம் வட்டம் | குறித்த நிலைப்படி |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 3 | மக்கள்தொகை | 337878 | 152045 | 185833 | குறைந்த அளவு 1,00,000 முதல் அதிகளவு 5,50,000/– |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | பெரம்பலூர் | பெரம்பலூர் | பெரம்பலூர் | – |
| 5 | சட்டமன்ற தொகுதியின் பெயர் | குன்னம் | 147. பெரம்பலூர் (அ.வ) பகுதி 148 குன்னம் (பகுதி) | 148. குன்னம் (பகுதி) | – |
| 6 | பாராளுமன்ற தொகுதியின் பெயர் | சிதம்பரம் | பெரம்பலூர் சிதம்பரம் | சிதம்பரம் | – |
| 7 | நகராட்சிகளின் எண்ணிக்கை (பெயருடன்) | – | – | – | – |
| 8 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | (1) ஆலத்தூர் (2) வேப்பூர் | (1) ஆலத்தூர் | (1) வேப்பூர் | 2 அல்லது 3 முழு ஊராட்சி ஒன்றியங்கள் |
| 9 | சிறப்பு பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை (பெயருடன்) | லப்பைக்குடி காடு | – | லப்பைக்குடி காடு | – |
| 10 | உள்வட்டங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | வடக்கலூர், வரகூர், கீழப்புலியூர், செட்டிகுளம், கொளக்காநத்தம் 5 (ஐந்து) | கூத்தூர், செட்டிகுளம், கொளக்காநத்தம் 3 (மூன்று) (புதிதாக தோற்றுவிக்கப்பட உள்ள பிர்கா உள்பட) | வரகூர் கீழப்புலியூர், வடக்கலூர் 3 (மூன்று) | – |
| 11 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 86 | 39 | 47 | குறைந்த அளவு 30 கிராமங்கள் |
| 12 | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 77 | 39 | 38 | – |
| 13 | தலைமையிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ள கிராமத்தின் தூரம் | 42 கி.மீ | 29 கி.மீ. | 42 கி.மீ. | – |
| | | திருமாந்துறை தேனூர் | அழகிரிபாளையம் | திருமாந்துரை | – |

(V) மேலும் புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ஆலத்தூர் வட்டத்திற்கான பணியிட விபரம் பின்வருமாறு:—

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் | தற்காலிகம் | குன்னம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | குன்னம் வட்டத்தில் நிறுத்திவைக்கப் படவேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | ஆலத்தூர் வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்களின் எண்ணிக்கை | ஆலத்தூர் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கவேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | ஆலத்தூர் வட்டத்திற்கு அனுதிக்கப்பட வேண்டிய மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை | Std. Pattern இன்படி அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் (3 குறுவட்டங்களில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **(அ)** | **பொதுப்பிரிவு** | | | | | | | | |
| 1 | வட்டாட்சியர் | 1 | – | 1 | 1 | 0 | 1 | 1 | 1 |
| 2 | தலைமையிடத்து துணை வட்டாட்சியர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 3 | மண்டல துணை வட்டாட்சியர் | – | 2 | 2 | 1 | 1 | – | 1 | 1 |
| 4 | உதவியாளர் | 5 | – | 5 | 4 | 1 | 3 | 4 | 6 |
| 5 | சரக வருவாய் ஆய்வர் | 5 | – | 5 | 3 | 2 | 1 | 3 | 3 |
| 6 | இளநிலை உதவியாளர் | 4 | – | 4 | 3 | 1 | 3 | 4 | 4 |
| 7 | தட்டச்சர் | – | 1 | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 8 | ஈப்பு ஓட்டுநர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 9 | பதிவுறு எழுத்தர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 10 | அலுவலக உதவியாளர் | 3 | – | 3 | 2 (as per 12:1) | 1 | 1 | 2 | 3 |
| 11 | இரவு காவலர் | – | – | – | – | – | 1 | 1 | 1 |
| 12 | மசால்ஜி | – | – | – | – | – | 1 | 1 | 1 |
| | **மொத்தம்** | **21** | **3** | **24** | **18** | **6** | **15** | **21** | **24** |
| | **வண்ணத்தொலைக்காட்சிப்பெட்டி** | | | | | | | | |
| 1 | வருவாய் ஆய்வர் (வ.தொ.பெ.) | – | 1 | 1 | 1 | – | – | – | – |
| 2 | கணினி இயக்குபவர் | – | 1 | 1 | 1 | – | – | – | – |
| | **மொத்தம்** | **–** | **2** | **2** | **2** | **–** | **–** | **–** | **–** |
| **(ஆ)** | **சமூக பாதுகாப்புத் திட்டம்** | | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் (ச.பா.தி) | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 2 | உதவியாளர் | – | 2 | 2 | 1 | 1 | – | 1 | – |
| 3 | இளநிலை உதவியாளர் | – | – | – | – | – | – | – | – |
| 4 | பதிவுறு எழுத்தர் | – | – | – | – | – | – | – | – |
| 5 | ஈப்பு ஓட்டுநர் | – | 1 | 1 | 1 | – | 1 | 1 | – |
| | **மொத்தம்** | **1** | **3** | **4** | **3** | **1** | **2** | **3** | **1** |

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் | தற்காலிகம் | குன்னம் வட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | குன்னம் வட்டத்தில் நிறுத்திவைக்கப் படவேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | ஆலத்தூர் வட்டத்திற்கு மாற்றம் செய்யக்கூடிய பணியிடங்களின் எண்ணிக்கை | ஆலத்தூர் வட்டத்திற்கு புதிதாக தோற்றுவிக்கவேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | ஆலத்தூர் வட்டத்திற்கு அனுதிக்கப்பட வேண்டிய மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை | Std. Pattern இன்படி அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் (3 குறுவட்டங்களில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **(இ) தேர்தல் பிரிவு** | | | | | | | | |
| 1 | தேர்தல் துணை வட்டாட்சியர் | – | 1 | 1 | 1 | – | 1 | 1 | – |
| 2 | உதவியாளர் | – | 1 | 1 | 1 | – | 1 | 1 | – |
| 3 | இளநிலை உதவியாளர் | – | 1 | 1 | 1 | – | 1 | 1 | – |
| | **மொத்தம்** | **–** | **3** | **3** | **3** | **–** | **3** | **3** | **–** |
| | **(ஈ) வட்ட வழங்கல் பிரிவு** | | | | | | | | |
| 1 | தனி வட்டாட்சியர் (கு.பொ.வ.) | – | – | – | – | – | – | – | – |
| 2 | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | – | 1 | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 3 | உதவியாளர் | – | – | – | – | – | – | – | – |
| 4 | இளநிலை உதவியாளர் | – | – | – | – | – | – | – | – |
| 5 | வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர்) | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 6 | ஈப்பு ஓட்டுநர் | – | – | – | – | – | – | – | – |
| 7 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 2 | 2 | – | 2 | 2 | 2 |
| | **மொத்தக் கூடுதல்** | **23** | **12** | **35** | **28** | **7** | **21** | **28** | **27** |
| | **(உ) நில அளவைப் பிரிவு** | | | | | | | | |
| 1 | வட்ட தலைமை நில அளவர் | – | – | – | – | – | – | – | – |
| 2 | வட்ட துணை ஆய்வாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 3 | வட்ட சார் ஆய்வாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 4 | முதுநிலை வரைவாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 5 | வட்ட வரைவாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| 6 | சரக நில அளவர் | 5 | – | 5 | 3 | 2 | 1 | 3 | 1 |
| 7 | புல உதவியாளர் | 1 | – | 1 | 1 | – | 1 | 1 | 1 |
| | **மொத்தம்** | **10** | **–** | **10** | **8** | **2** | **6** | **8** | **5** |
| | **கூடுதல் (வருவாய்த் துறை+நில அளவைப் பதிவேடுகள் துறை)** | | | | | | | | |
| | கூடுதல் வருவாய்த் துறை | 23 | 12 | 35 | 28 | 7 | 21 | 28 | 27 |
| | நில அளவைப் பிரிவு | 10 | – | 10 | 8 | 2 | 6 | 8 | 5 |
| | **மொத்தம்** | **33** | **12** | **45** | **36** | **9** | **27** | **36** | **32** |
| ஊ | கிராம நிருவாக அலுவலர்கள் | – | – | – | – | – | – | – | – |
| எ | கிராம உதவியாளர் | – | – | – | – | – | – | – | – |

(vi) புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்ட ஆலத்தூர் வட்டத்திற்கு வருடத்திற்கு கீழ்க்கண்டவாறு தொடரும் செலவினம் தோராயமாக ரூ. 2,20,66,668/– ஆகும் என்றும், தொடரா செலவினம் ரூ. 2,41,53,300/– ஆகும் என்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

**I. தொடரும் செலவினங்கள்:**

| *வ.எண்* | *விபரம்* | *தொகை 1 வருடத்திற்கு (தோராயமாக)* |
|---|---|---|
| 1 | பணியாளர்களின் ஊதியம் தோராயமாக (புதிய/ஊதிய ஏற்ற முறையில்) மாத ஊதியம் | 2,16,03,168 |
| 2 | அலுவலக கட்டிட வாடகை | 1,50,000 (12,500x12) |
| 3 | எரிபொருள் (2 ஈப்பு) | 1,68,000 ரூ. 140லிxரூ.50 x 12 மாதங்கள் = 2 ஈப்புக்கு) |
| 4 | தொலைபேசி கட்டணம் | 25,500 ரூ.4,250x6 மாதங்களுக்கு |
| 5 | மின்சாரக் கட்டணம் | 1,20,000 (20000x 6 months) |
| 6 | சில்லரை செலவினம் | – |
| | **மொத்தம்** | **2,20,66,668** |

**II. தொடரா செலவினங்கள்:**

| *வ.எண்* | *விபரம்* | *தொகை 1 வருடத்திற்கு (தோராயமாக)* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 1 | அலுவலக கட்டிடம் | 2,02,86,000 | 1 |
| 2 | வட்டாட்சியர் குடியிருப்பு | 19,32,000 | 1 |
| 3 | தளவாடங்கள் | 6,07,300 | – |
| 4 | ஈப்பு | 11,12,000 | 2 (ஒன்றிற்கு 5,56,000) |
| 5 | தொலைபேசி இணைப்பு | 6,000 | 2 |
| 6 | கணினி | 75,000 | 3 |
| 7 | பிரிண்டர் | 25,000 | 3 |
| 8 | ஜெராக்ஸ் இயந்திரம் | 65,000 | 1 |
| 9 | பேக்ஸ் | 10,000 | 1 |
| 10 | குளிர்சாதனம் | 25,000 | 1 |
| 11 | தீயணைப்பான் | 10,000 | 2 |
| | **மொத்தம்** | **2,41,53,300** | |

(vii) முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் தனது அறிக்கையில், பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில்,

(i) குன்னம் வட்டம் செட்டிகுளம் குறுவட்டத்திலிருந்து 4 வருவாய் கிராமங்களை கொளக்காநத்தம் குறுவட்டத்தில் சேர்த்து மொத்தம் 25 கிராமங்களில் 13 கிராமங்கள் உள்ளடக்கிய ''கூத்தூர்'' என்ற புதிய குறுவட்டத்தை உருவாக்கவும்,

(ii) குன்னம் வட்டத்தினை சீரமைத்து ''ஆலத்தூர்'' என்ற புதிய வட்டத்தை, புதியதாக தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்ட கூத்தூர் குறுவட்டத்துடன் (13 கிராமங்கள்) செட்டிக்குளம், குறுவட்டம் (14 கிராமங்கள்) கொளக்காநத்தம் குறுவட்டம் (12 கிராமங்கள்) ஆக மொத்தம் 3 குறுவட்டங்கள் அடங்கிய 39 கிராமங்கள் உள்ளடக்கிய வட்டத்தை உருவாக்கவும்,

(iii) புதியதாக உருவாக்கப்பட உள்ள ஆலத்தூர் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 28 பணியிடங்களும் (குன்னம் வட்டத்திலிருந்து மறு •பரவலமர்த்தல் மூலம் 7 பணியிடங்கள் + புதிதாக தோற்றுவித்தல் மூலம் 21 பணியிடங்கள்) நில அளவை பிரிவிற்கு 8 பணியிடங்களும் (குன்னம் வட்டத்திலிருந்து மறுபரவமர்த்தல் மூலம் 2 பணியிடங்கள்+ புதிதாக தோற்றுவித்தல் மூலம் 6 பணியிடங்கள்) தோற்றுவிக்கவும்.

(iv) தொடரும் செலவினம் ரூ.2,20,66,668/—ம் மற்றும் தொடரா செலவினம் ரூ.2,41,53,300/—ம் ஒப்பளிப்பு செய்யவும், அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

**3.** முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:—

(i) பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்தினை சீரமைத்து, கூத்தூர் என்ற குறுவட்டத்தினை புதிதாக உருவாக்கி, செட்டிக்குளம், கொளக்காநத்தம் மற்றும் கூத்தூர் ஆகிய குறுவட்டங்களை உள்ளடக்கிய புதிய ஆலத்தூர் வட்டம் இணைப்பு (1)—ல் கண்டவாறு உருவாக்கப்படுகிறது.

(ii) மூன்று உள்வட்டங்கள் அடங்கிய குன்னம் வட்டத்தில், பொதுப்பிரிவிற்கு 28 பணியிடங்களையும் நில அளவைப் பிரிவிற்கு 8 பணியிடங்களையும் நிறுத்தி வைத்து, மூன்று உள்வட்டங்கள் அடங்கிய புதிய ஆலத்தூர் வட்டத்திற்கு பொதுப்பிரிவிற்கு 28 பணியிடங்களும் (குன்னம் வட்டத்திலிருந்து மறு •பரவலமர்த்தல் மூலம் 7 பணியிடங்கள் + புதிதாக தோற்றுவித்தல் மூலம் 21 பணியிடங்கள்) நில அளவைப் பிரிவிற்கு 8 பணியிடங்களும் (குன்னம் வட்டத்திலிருந்து மறுபரவமர்த்தல் மூலம் 2 பணியிடங்கள்+ புதிதாக தோற்றுவித்தல் மூலம் 6 பணியிடங்கள்) தோற்றுவிக்கப்படுகிறது.

(iii) புதியதாக உருவாக்கப்படும் ஆலத்தூர் வட்டத்திற்கு புதிதாக 27 பணியிடங்கள் வெவ்வேறு நிலைகளில் தோற்றுவிக்கப்படுவதால் தொடரும் செலவினமாக ஆண்டுக்கு ரூ, 2,20,66,668/— (ரூபாய் இரண்டு கோடியே இருபது இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்தெட்டு மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(iv) புதிதாக உருவாக்கப்படும் ஆலத்தூர் வட்டத்திற்கு தொடராச் செலவினமாக ரூ. 2,41,53,300/— (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொன்று இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து முந்நூறு மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3—இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:—

**(அ) பணியாளர் சம்பளங்கள்**

(i) **வருவாய் பணியிடங்கள் ரூ. 2,16,01,168/—**

2053 00 மாவட்ட நிருவாகம்—094 ஏனைய பணியாளரமைப்பு—I
திட்டத்தில் சேராதது — AB—வட்டப் பணியாளரமைப்புகள்—01 சம்பளங்கள்

(து.தொ.கு. 2053 00 094 AB 0102)

(ii) **நில அளவைப் பணியிடங்கள் ரூ. 1,000/—**

2029 00 நில வருவாய்—102 நில அளவை நிலவரி ஏற்பாட்டுப் பணிகள்—I
திட்டத்தில் சேராதது— AF—நில அளவை பரமரிப்பு பணி—01 சம்பளங்கள்

(து.தொ.கு. 2029 00 102 AF 0105)

(iii) **குடிமைப் பொருள் பணியிடங்கள் ரூ. 1,000/—**

3456 00 நுகர்பொருள் வழங்கல்—001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும்—I
திட்டத்தில் சேராதது—AB—வட்டப் பணியாளர் அமைப்பு—01 சம்பளங்கள்

(து.தொ.கு. 3456 00 001 AB 0108)

(ஆ) **தொலைபேசி கட்டணங்கள் ரூ. 31,500/—**
05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள்

(து.தொ.கு. 2053 00 094 AB 0513)

(இ) **மின் கட்டணங்கள் ரூ. 1,20,000/—**
05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள்

(து.தொ.கு. 2053 00 094 AB 0531)

(ஈ) **அறைகலன் ரூ. 6,07,300/—**
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்

(து.தொ.கு. 2053 00 094 AB 0559)

(உ) **வாடகை செலவினங்கள் ரூ. 1,50,000/—**
06 வாடகை, கட்டண வீதங்கள், வரிகள் 01 வாடகை

(து.தொ.கு. 2053 00 094 AB 0611)

(ஊ) **இயந்திரமும், சாதனமும் வாங்குதல் ரூ. 1,10,000/–**
19 இயந்திரமும், சாதனமும் 01 வாங்குதல்

(து.தொ.கு. 2053 00 094 AB 1914)

(எ) **வாகனங்கள் வாங்குதல் ரூ. 11,12,000/–**
21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல்

(து.தொ.கு. 2053 00 094 AB 2119)

(ஏ) **பெட்ரோலியம் மற்றும் டீசல் செலவினங்கள் ரூ. 1,68,000/–**
45 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்

(து.தொ.கு. 2053 00 094 AB 4500)

(ஐ) **கணினியும் துணை பாகங்களும் வாங்குதல் ரூ. 1,00,000/–**
76 கணினியும் துணை பாகங்களும் 01 வாங்குதல்

(து.தொ.கு. 2053 00 094 AB 7614)

(ஒ) **அலுவலகக் கட்டடம் ரூ. 2,02,86,000/–**

4059 பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு–01 அலுவலகக் கட்டடங்கள்–051 கட்டுமானம்–பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–JC நிலவரி–16 பெரும்பணிகள்

(து.தொ.கு. 4059–01–051–JC–1609)

(ஓ) **வட்டாட்சியர் குடியிருப்பு ரூ. 19,32,000/–**

4216 வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு–01 அரசு குடியிருப்பு கட்டடங்கள்–106 பொது தொகுப்பு இடவசதி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–JC வருவாய்த் துறை – வீட்டுவசதித் திட்டங்கள்–16 பெரும்பணிகள்

(து.தொ.கு. 4216 01 106 JC 1601)

மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள புது துணைப்பணி குறித்த செலவினமாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2012–2013 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது./வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 61959/CMPC/12, நாள் 8–11–2012–இல் இசைவுடன் வெளிடப்படுகிறது. (கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண் 1538 (ஒரு ஆயிரத்து ஐநூற்று முப்பத்து எட்டு).

(ஆளுநரின் ஆணைப்படி)

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**இணைப்பு-I**

*[அரசாணை (நிலை) எண் 410, வருவாய்த் துறை, நாள் 21–11–2012.]*

**அறிவிக்கை**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போதய குன்னம் வட்டத்தைப் பிரித்து கீழ்க்கண்ட 3 குறுவட்டங்களை உள்ளடக்கி ஆலத்தூரைத் தலையிடமாகக் கொண்டு புதிய ஆலத்தூர் வட்டம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறுவட்டங்களைத் தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

**2.** புதிதாக உருவாக்கப்படும் ஆலத்தூர் வட்டத்தில் உள்ளடங்கும் குறுவட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது குன்னம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி ஆலத்தூர் வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

**அட்டவணை**

| *வ.எண்.* | *வட்டத்தின் பெயர்* | *உள்வட்டங்களின் பெயர்* |
|---|---|---|
| 1 | ஆலத்தூர் | 1. செட்டிக்குளம் |
| | | 2. கொளக்காநத்தம் |
| | | 3. கூத்தூர் |

**ராஜீவ் ரஞ்சன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU